விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 | மலர் : 01 | 30.04.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 150 | பக்கங்கள் : 16




## இராணுவ உதவிகள் தொடர்பாக சீனா - இலங்கை உடன்படிக்கை

### ஜெனரல் பெங்கெற் - ஜெனரல் கமல் குணரத்ன கைச்சாத்து

கொழும்பு, ஏப் 30

உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோக பூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டன. கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பில் இந்த ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்ட

15





# வடக்கு இடர்நிலையை கையாள்வது எவ்வாறு?

### ஆளுநர் கூட்டிய மாநாட்டில் முக்கியமான முடிவுகள் முன்னாயத்த திட்டம் ஒன்றை தயாரிக்கவும் உத்தரவு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

வட மாகாணத்தில் எதிர்பாராத அனர்த்த நிலைமை ஒன்று ஏற்படின் அதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் நேற்று ஆராய்ந்த வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இதற்காக முன்னாயத்த திட்டம் ஒன்றினை தயாரித்து முன்வைக்குமாறு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கினார். ஒரு வாரத்திற்குள் இதனை சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

15

## மிக மோசமான நிலைக்கு நாடு செல்லும் அபாயம்!

### சுகாதார அமைச்சின் உதவி பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.30

பொதுமக்கள் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியம். இல்லையேல், நாடு மிகவும் மோசமான நிலைக்குச் செல்லும். கொரோனா வைரஸ் உருமாறினாலும், அவற்றை எதிர்ப்பதற்கு நாம் தயார் நிலையிலேயே உள்ளோம் என

15

## 1,531 பேருக்கு தொற்று

கொழும்பு, ஏப்.30

நாட்டில் நேற்று மட்டும் ஆயிரத்து 531 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ்

15



சீன அமைச்சர் புறப்பட்டவுடன்

## பிரதமரை சந்தித்த இந்தியத் தூதுவர்

கொழும்பு, ஏப். 30

இலங்கைக்கான இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த சீன பாதுகாப்பு அமைச்சர் தமது பயணத்தை முடித்துக்கொண்டு சீனாவுக்குப் புறப்பட்ட நிலையில், இலங்

15

## யாழ்ப்பாணத்தில் 14 பேர் உட்பட வடக்கில் 19 பேருக்கு கொரோனா

### யாழ். பல்கலை. சட்டத்துறை மாணவன், பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்ப்பாணத்தில் 14 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 19 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று வியாழக்கிழமை உறுதி செய்யப்

15

## அபாய வலயங்கள் குறித்த தகவலை உடனே வெளியிடவேண்டும் அரசு!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள ஆபத்தான வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்ட வரைபடங்களை தொற்று நோயியல் பிரிவு உடனடியாக வெளியிட வேண்டும் என அரசு மருத்துவ அதி

15



## உயிரிழப்புகள், தொற்றாளர் தொகை சடுதியாக அதிகரிக்க காரணம் என்ன?

### இராணுவத் தளபதி விளக்கம்

கொழும்பு, ஏப். 30

புதிதாக பரவிவரும் பிரித்தானிய வைரஸ் காரணமாகவே இலங்கையில் கொரோனா வைரஸ் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னரை போல இல்லா

15

## கொரோனாவால் நேற்று 6 பேர் பலி

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் மேலும் 6 பேர் கொரோனாவால் மரணமான தகவல் நேற்று வெளியாகியுள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனாவால் மரணமானோரின் மொத்த எண்ணிக்கை 667 ஆக உயர்ந்துள்ளது.

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு இடர்...

வடமாகாணத்தில் தற்போதுள்ள கொவிட்-19 நிலைமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வட மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம் சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதமசெயலாளர் , ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் உதவிச்செயலாளர் , ஆளுநரின் இணைப்புச் செயலாளர், மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள், வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்ட அரச அதிபர்கள், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், திணைக்கள தலைவர்கள் , முப்படையின் தலைவர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண சுகாதார பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட முப்படைகளின் தளபதிகளிடம் கொவிட் -19 நிலைமை தொடர்பாக கேட்டறிந்த ஆளுநர் கருத்து தெரிவிக்கையில், இந்தியாவில் கொவிட்-19 பரவலுக்கு, மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்ற தவறியமையே தற்போது பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் , அதேபோன்று எமது மக்களும் மத விழாக்கள் மற்றும் திருமண நிகழ்வுகளில் சுகாதார விதிமுறைகளினை பின்பற்றத் தவறுவதினால் பாரிய எதிர்விளைவுகளினை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவித்தார்.

எனவே திருமண மண்டபங்களின் மொத்த கொள்ளளவில் 50 வீதமானவர்களை மட்டும் அனுமதிக்கவும் - ஆகக் கூடியது 150 பேர் வரையில் அனுமதிக்க முடியும் எனவும், தொடர்ந்து பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினரை கண்காணிப்பில் ஈடுபட்டு விதி முறைகளினை மீறுபவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார். இதனைவிட இவ்வாறான நிகழ்விற்கு வெளி மாவட்டத்தினரை அனுமதிக்க வேண்டாம் எனவும் தெரிவித்தார். அத்துடன் சினிமா திரையரங்குகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

சட்டவிரோதமாக கடல் வழியாக இலங்கைக்கு வருபவர்கள் தொடர்பிலும் முப்படையினருடன் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர்களிற்கு குறித்த கண்காணிப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

மக்கள் விற்பனை நிலையங்களில் பல மணி நேரம் தரித்து நின்று பொருட்களை கொள்வனவு செய்வதை தவிர்த்து வீட்டிலிருந்து கையடக்க தொலைபேசி மற்றும் ஏனைய வழிமுறைகளினூடாக தகவல் வழங்கி பொருட்களினை கொள்வனவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தவும், மரக்கறி உள்ளிட்ட பழுதடையும் பொருட்களினை மொத்தமாக குறிப்பிட்ட இடங்களில் கொள்வனவு செய்து அதனை சிறு சிறு வியாபாரிகள் மற்றும் கிராமப்புறங்களில் விற்பனை செய்வதற்கு உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் பொறிமுறை ஒன்றை உருவாக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் முகக்கவசம் அணிவது மட்டுமல்லாது முகப் பாதுகாப்பு கவசம் அணிவது மிகச்சிறந்த பாதுகாப்பு அணுகுமுறை எனத் தெரிவித்த ஆளுநர், வெளி மாகாணங்களுக்கு சென்று பொருட்களினை கொள்வனவு செய்து வருபவர்களின் விபரங்களை பேணி அவர்களுக்கு அடிக்கடி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு இறுக்கமான கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வர்த்தக சங்கத்தினர் சுகாதார தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக வவுனியா மாவட்ட வர்த்தகர்களில் பெரும்பான்மையினர் அடிக்கடி வேறு மாகாணங்களுக்கு சென்றுவருவதால் மேற்குறித்த நடைமுறைகள் இறுக்கமாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.

போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பேருந்துகளில் ஆசனத்திற்கு அளவாக பயணிகளினை ஏற்றவேண்டும் இருந்தபோதிலும் தூர இடங்களுக்கான சேவைகளினை அந்த விதத்தில் செயற்படுத்தும் போது சேவைகளை அதிகரிப்பது தொடர்பான ஒரு வேண்டுகோளினை தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையிடம் முன்வைக்க ஆலோசிக்கப்பட்டது. மேலும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் குறித்த பிரதேச மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடல்களினை ஏற்பாடு செய்து கொவிட்-19 இடர் நிலையில் பின்பற்ற வேண்டிய சுகாதார விதிமுறைகள் பற்றி அறிவுறுத்த ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் சந்தைகளில் வியாபாரம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அப்பிரதேசங்களில் வாகனங்கள் நிறுத்துவதை தடைசெய்தல் தொடர்பிலும் ஆராயப்பட்டது. ஏனைய நாடுகளில் கடந்த ஒன்றரை வருடத்தில் மக்களின் வாழ்க்கை முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஆளுநர், அதே போன்று எமது மக்களின் வாழ்க்கை முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் வழிகாட்டல்களை தயாரிக்க ஆலோசனை வழங்கினார்.

மேலும் எதிர்பாராத அனர்த்த நிலைமை ஒன்று ஏற்படின் அதனை எவ்வாறு கையாளுதல் என்பது தொடர்பான முன்னாயத்த திட்டம் ஒன்றினை தயாரித்து முன்வைக்குமாறு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. ஒரு வாரத்திற்குள் இதனை சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். தனிமைப்படுத்தல் நிலையங்கள் தொடர்பில் ஆரயாப்பட்டதோடு தனிமைப்படுத்தல் நிலையங்களை தேவைக்கேற்ப அதிகரிப்பதற்குரிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதற்காக மாவட்ட அரச அதிபர்களின் ஒத்துழைப்பும் அவசியம் எனத் தெரிவித்த ஆளுநர், யாழ்போதனா வைத்தியசாலையின் தற்போதைய நிலமைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

## பிரதமரை...

கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக்காலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சுகளை நடத்தினார். இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

## இராணுவ...

தாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வே பெங்கெற்றின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இருதரப்பு கலந்துரையாடல் கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்தே குறிப்பிட்ட ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கைக்கான இரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வே பெங்கெற் தலைமையி லான சீன தூதுக்குழுவுடன் இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் இரு தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக்கான சீன தூதுவர் கி சென்ஹோங், இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் முப்படை தளபதிகள் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூர்ந்த ஜெனரல் குணரத்ன, பௌத்தம், வர்த்தகம், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் உலகளாவிய இணைப்பு உள்ளிட்ட பல வழிகளில் சீனா இலங்கையின் வரலாற்று ரீதியில் நட்பு நாடாக இருந்து வருகின்றது என்றார்.

மேலும், அண்மையில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் போது சீன அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு பாதுகாப்பு செயலாளர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த ஜெனரல் பெங்கெற், நடைமுறை சாத்தியமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத் தும் வகையில் இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவிகள் தொடர்பான ஆவணங்களிலும் கைச்சாத்திடப்பட்டன.

## 1,531 பேருக்கு...

தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஆறாயிரத்து 444ஆக அதிகரித்தது.

அத்துடன், நாட்டில் மேலும் 362 பேர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பிலிருந்து குணமடைந்த நிலையில், தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 95ஆயிரத்து 445ஆகப் பதிவாகியது.

மேலும், கொரோனாவால் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 661ஆக உள்ள நிலையில், இன்னும் 10 ஆயிரத்து 338 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (எ)

## உயிரிழப்புக்கள்...

மல் தற்போது நோய் தொற்றிற்கு ஆளாகி பத்து முதல் 14 நாட்களிற்குள் தொற்றாளர்கள் கடும் பாதிப்பை வெளிப்படுத்துகின்றனர் எனவும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னைய கொரோனா வைரஸ்களிடமிருந்து மாறுபட்ட விதத்தில் தற்போதைய வைரஸ் செயற்படுகின்றது என தெரிவித்துள்ள அவர், அதிகளவானவர்கள் தொற்றிற்குள்ளாகின்றனர் இதன் காரணமாக உயிரிழப்புகளும் அதிகரிக்கின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

முன்னர் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்கள் பத்து முதல் 14வது நாளில் குணமடையத் தொடங்கினார்கள் என தெரிவித்த அவர், இதன் காரணமாக உயிரிழப்புகள் குறைவாக காணப்பட்டன. ஆனால், புதிய வைரஸ் வேறு விதத்தில் செயற்படுவதால் நாளாந்தம் ஆயிரம் நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் அதற்கு சமாந்திரமாக உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

## அபாய வலயங்கள்...

காரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் ஊடாக மக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள முடியும் எனவும், ஆபத்து அதிகமான பிரதேசங்களுக்குச் செல்லும்போது மக்கள் மேலும் அவதானமாகச் செயற்பட கூடியதாக இருக்கும் எனவும் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை முடக்குவதற்கான திட்டம் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும், அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கடுமையான தனிமைப்படுத்தல் விதிமுறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும்.

நாட்டில் இதுவரை கொரோனா பரவலில் தீவிரமான அதிகரிப்பு பதிவாகவில்லை. எனினும், நிலைமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினால் வைரஸ் பரவுவதைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும்- என்றார்.

## மிக மோசமான...

சுகாதார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் எஸ்.எம். ஆர்னல்ட் தெரிவித்தார்.

கொழும்பில் சுகாதார பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 27 ஆம் திகதியன்று 1,111 பேரும், 28 ஆம் திகதியன்று 1,466 பேருமாக 2,577 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். நம் நாட்டில் முன்னெப்போதும் இதுபோன்று தொற்றாளர்களின் எண்ணிக்கை காணப்படவில்லை. இதற்குக் காரணம் கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்திருப்பது ஆகும். இதனை எதிர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். அவர்கள் வீண் பயணங்கள் மேற்கொள்வதைத் தவிர்த்து சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தத்தமது வீடுகளில் இருந்தாலே போதுமானது.

கொரோனா தொற்றாளர்களின் சிகிச்சைகளுக்காக 82 அவசர சிகிச்சை பிரிவுகளும், 12,789 கட்டில்களும் தயார் நிலையில் உள்ளன. இந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். மேலும், எங்களுக்கு ஒட்சிசன் தட்டுப்பாடு இல்லை. சகல ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம். ஆகவே, கொரோனா உருமாறினாலும், அவற்றை எதிர்ப்பதற்கு நாம் தயார் நிலையிலேயே இருக்கிறோம்- என்றார். (எ)

## யாழ்ப்பாணத்தில்...

பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 760 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஐந்து பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்களில் நால்வர் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள். மற்றைய ஒருவர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிலும் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்த நால்வரில் இருவர் கொடிகாமம் சந்தை வியாபாரிகளும், இருவர் கொடிகாமம் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 2 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவன் ஒருவருக்கு தொற்று கண்டறிப்பட்டது.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் இருவருக்கும், கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒருவருக்கும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஒருவருக்கும் என நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என்று மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஐயா அப்போது தீவுப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

எழுபதுகளின் பிற்பகுதி அது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாக செயலாளராகவும் இருந்த பண்டிதர் ஐயா, கட்சி யாப்பின் பிரகாரம் தீவுப்பகுதி கிளையின் தலைவராகவும் இருந்தார். அந்தந்தத் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களே அந்த தொகுதிக் கிளைகளின் தலைவர்களாகவும் இருப்பர்.

கிளைக்குழுவின் பொதுக்கூட்டம் அது. பண்டிதர் ஐயா தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்.

அந்தத் தடவை தொகுதிக்கிளையின் செயலாளராக வேலணையைச் சேர்ந்த ஆசிரியரான மாணிக்கவாசகரை தெரிவுசெய்யவே பண்டிதர் ஐயா விரும்பினார். இந்த மாணிக்கவாசகர் வேறு யாருமல்ல, திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் தந்தையே.

ஆனால், பெரும்பாலான இளைஞர்களோ, நாரந்தனையைச் சேர்ந்த ஓர் இளைஞனை தெரிவுசெய்யவே விரும்பினார்கள். செயலாளரை தெரிவு செய்வதற்கான நேரம் வந்தது.

தலைமை தாங்கிக்கொண்டிருந்த பண்டிதர் ஐயா, "இப்போது செயலாளர் ஒருவரைத் தெரிவுசெய்வோம்", என்று சொல்லிவிட்டு நின்றுவிடவில்லை, போட்டிபோடவிருந்த அந்த இளைஞரின் பெயரைச் சொல்லி, "தம்பி..... ஒரு நல்ல ஆளை தெரிவுசெய்யுமன்", என்றார்.

வேறு வழியின்றி, எழும்பிய அந்த இளைஞர், மாணிக்கவாசகரின் பெயரை முன்மொழிந்தார்.

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் தந்தை செல்வாவின் கொள்கை என்ன என்பது குறித்து சம்பந்தன் ஐயா விளக்க வேண்டும் என்று எழுதியிருந்தேன். அதனைப் படித்த நண்பர் ஒருவர், தொடர்புகொண்டு, இதனையும் நீங்கள் குறிப்பிட்டிருக்கலாம் என்றார்.

அதாவது, 1949இல் தந்தை செல்வா தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கி சமஷ்டி தீர்வுக்காக போராடிக் களைத்துப் போய், கடைசியில் தமிழீழம் கேட்டாரெனவும் அவர் இறக்கும்போது அவரைப் பொறுத்தவரை தனிநாடுதான் தீர்வு தரும் என்று நம்பிக்கொண்டே மறைந்தார் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

சம்பந்தன் ஐயா, முதன்முதலில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டதும் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துத்தான் என்பதையும் குறிப்பிட்டிருக்கலாம் என்றார் நண்பர்.

1977இல் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து முதல் முதலாக போட்டியிட்ட சம்பந்தன் ஐயா, அதன் பின்னர் நடந்த மூன்று தேர்தல்களில் தோல்வியடைந்தார்.

பின்னர் 2001இல் புலிகளால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் நடந்த தேர்தலில் வெற்றிபெற்ற சம்பந்தன் அதன் பின்னர், தொடர்ச்சியாக வெற்றிபெற்றார்.

2001இல் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற கொள்கையோடு களம் இறங்கியபோது, கூட்டமைப்புக்கு சம்பந்தனே தலைமை தாங்கினார்.

இந்தத் தகவல்களை ஞாபகப்படுத்திய அந்த நண்பர், இன்னுமொரு கொசுறுத் தகவலையும் தந்தார்.

கடந்த தேர்தலில் கூட்டமைப்புக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை திருகோணமலையைச் சேர்ந்த கனடா குகதாசனுக்கு வழங்க வேண்டும் என்பதே சம்பந்தன் ஐயாவின் விருப்பமாக இருந்தது. ஆனால், அம்பாறையில் ஏற்பட்ட தோல்வியும், அந்த இடத்தை எங்கே, மாவை கேட்டுவிடுவாரோ என்ற பயமும் அவசரம் அவசரமாக சர்ச்சைக்குரிய வகையில் அந்த இடம் நிரப்பப்பட்டதும் ஏற்கனவே, இந்தப் பத்தியில் விபரிக்கப்பட்டுவிட்டது.

இப்போது விடயம் அதுவல்ல, தான் உறுதியளித்தது போல குகதாசனை எம்.பி. ஆக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் சம்பந்தன் ஐயாவுக்கு ஏற்பட்டிருப்பதாகவும், அதனால், பாராளுமன்றத்திற்குக் கூட செல்லமுடியாத அளவுக்கு தளர்வடைந்து விட்ட தானே பதவியிலிருந்து ஓய்வுபெற்றால், திருமலை மாவட்டத்தில் போட்டியிட்டு, தனக்கு அடுத்ததாக விருப்பு வாக்கு பட்டியலில் உள்ள குகதாசன், எம்.பி.ஆவதற்கு வழிசமைக்கலாம் என்றும் விரும்புகிறாரென அவருக்கு நொருக்கமானவர்கள் கூறினார்களாம்.

இது நம்ம சுமந்திரனுக்கும் விருப்பமானதாகத்தானே இருக்கும் என்ற தனது கருத்தையும் கூடவே சொன்னார் அந்த நண்பர்.

சம்பந்தன் ஐயா ஓய்வுபெற்றுவிட்டதுபோல மாவை அண்ணரும் ஓய்வுபெறலாம் என்ற யோசனையை கட்சியின் அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தில் முன்வைத்துவிட்டு, மாவையையே அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரையும் தெரிவுசெய்யுங்கள் என்று கோரிக்கையை முன்வைத்தால், அவர் வேறுஒருவரை தெரிவுசெய்ய வாய்ப்பு ஏற்படும் என்று கணக்குப் போடுகிறராம் சுமந்திரன் என்கிறார் அந்த நண்பர்.

சுமந்திரனுக்கு நெருக்கமான அந்த நண்பரின் கதையைக் கேட்டபோது பண்டிதர் தொகுதிக்கிளை கூட்டத்தை நடத்திய விதம்தான் ஞாபகத்திற்கு வந்தது.!

**- ஊர்க்குருவி.**

# யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர்மீது புலனாய்வு பிரிவினர் தாக்குதல்!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், ஏப்.30**

**யாழ்ப்பாணம் நகரத்தின் - வெள்ளாந்தெருவில் குடும்பஸ்தர் ஒருவரை புலனாய்வுப் பிரிவினர் மோசமாகத் தாக்கினர். அத்துடன் அவரின் வீட்டிலிருந்த பொருட்களும் அடித்து உடைக்கப்பட்டன. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்து விட்டனர் எனத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

தாக்குதலுக்கு இலக்கானவரின் வீட்டின் ஒழுங்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுபோதையில் இருவர் நின்றிருந்தனர். அவர்கள் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்ததுடன் வீதியால் சென்ற இருவரை தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலை குறித்த குடும்பஸ்தர் தடுத்துள்ளார். அப்போது, தாக்குதலை நடத்தியவர்களிடம் நீங்கள் யார் என்று கேட்டபோது, அவர்கள் தாங்கள் புலனாய்வாளர்கள் என்று கூறியதுடன், அடையாள அட்டையையும் காட்டியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர் படம் எடுத்ததுடன், அவர்களின் மோட்டார் சைக்கிளையும் படம் பிடித்துள்ளார். இதை யடுத்து அன்று இரவு 7 மணியளவில், 7தொடக்கம் 8 மோட்டார் சைக்கிளில் வந்த 15 தொடக்கம் 20 பேர் வரையிலானவர்கள் குடும்பஸ்தரை மிக மோசமாக தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

குடும்பஸ்தர் மீது தாக்குதல் நடத்தியவர்கள், அவரின் கைபேசி, சங்கில் என்பவற்றை பறித்ததுடன் வீட்டிலிருந்த பொருட்களையும் அடித்து நொறுக்கி விட்டு சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய சென்றபோது, தாம் மறுநாள் சம்பவ இடத்திற்கு வருவதாக பொலிஸார் குடும்பஸ்தருக்கு தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

மறுநாள் காலையில் சிவில் உடையில் சென்ற பொலிஸார், வீட்டில் உடைந்த பொருட்களை படம் எடுத்தனர் என்றும், அதன் பின்னர் அந்தப் பொருட்களை வாங்கித் தந்தால் போதுமானது என்ற கோணத்தில் பேசினர் எனவும் அத்துடன் முறைப்பாட்டை பதிவு செய்யப் போவதில்லை என்று கூறினர் என்றும் பாதிக்கப்பட்டவர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து பாதிக்கப்பட்டவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய கிளையில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் த.கனகராஜ், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு விளக்கம் கோரி கடிதம் அனுப்பிவைத்துள்ளார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## உப தபாலகங்களின் சேவை நேரம் மாற்றம்!

*கொழும்பு, ஏப். 30*

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக நாட்டில் உப தபால் அலுவலகங்களின் சேவை நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், உப தபால் அலுவலகங்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மாத்திரமே சேவையை வழங்கும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், சனிக்கிழமைகளில் உப தபால் அலுவலகங்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை மாத்திரமே சேவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, உப தபால் அலுவலகங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குடும்பஸ்தர் மீதான தாக்குதல்: அதிகாரிகளுடன் ஆராய்வேன்!

### இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் குடும்பஸ்தர் மீது இராணுவப் புலனாய்வு பிரிவினர் நடத்தினர் என்று கூறப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுடன் ஆராய்வேன் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ். நகரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் இராணுவத் தளபதியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர்,

"மக்களைப் பாதுகாக்க வேண்டியது முப்படையினரின் பொறுப்பு. இவ்வாறான தாக்குதல் தொடர்பில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுடன் ஆராய்வேன்", என்று பதிலளித்தார். (ஐ)

## 2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் மன்னாரில் ஆரம்பம்!

*மன்னார், ஏப். 30*

மன்னார் மாவட்டத்தின் சுகாதார பணியாளர்களுக்கு 2ஆம் கட்ட கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

மாவட்ட ரீதியில் முதலாவது கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட சுகாதார முன்கள பணியாளர்களுக்கே 2 ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாவட்ட பொது வைத்தியசாலையில் தடுப்பூசி போடும் பிரதனா செயல்பாடும், தலைமன்னார் எருக்கலம்பிட்டி, அடம்பன், முசலி பகுதிகளிலும் பிரதேச ரீதியான தடுப்பூசி வழங்கலும் இடம்பெற்றன.

அத்துடன், தடுப்பூசிகளை பெற்ற சுகாதார பணியாளர்களுக்கான மருத்துவ ஆலோசனை அடங்கிய துண்டு பிரதிகள் மற்றும் கையேடுகளும் வழங்கப்பட்டன.

2ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்றும் நாளையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.04.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, சித்திரை 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# முதலமைச்சர் வேட்பாளர் விவகாரம்

ஒரு கூற்றுண்டு. அதாவது, ரோம் எரிந்து கொண்டிருக்கும்போது, நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தார் எனக் கூறுவர். பாரதூரமான பிரச்னைகள் சமூகத்தை ஆட்கொண்டிருக்கின்றபோது, பொறுப்பு வாய்ந்தவர்கள், பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்வதை சுட்டிக் காட்டுவதற்காகவே மேற்படி கூற்று, பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது. இதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த ஆதாரங்கள் இல்லாவிட்டாலும்கூட, சமூக அரசியல் விவாதங்களில் மேற்படி கூற்று பிரபலமான ஒன்றாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் நடைபெறும் உரையாடல்களை சற்று ஆழமாக நோக்கினால், இந்தக் கூற்றே நினைவுக்கு வருகின்றது. மக்கள் கொரோனா அச்சுறுத்தலால் மீண்டும் நிச்சயமற்ற நிலையொன்றை எதிர்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிச்சயமற்ற நிலைமை ஏற்படுகின்றபோது, மக்களை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் எந்தவோர் உரையாடலும் தமிழ் அரசியல்வாதிகள் மத்தியிலில்லை. அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் இவர்கள் ஒருபோதுமே சிந்திப்பதுமில்லை. ஆனால், மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதற்காக ஒவ்வொருவரும் முட்டி மோதிக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் நான்தான் பொருத்தமானவன் – எனக்குத்தான் அந்தத் தகுதி இருக்கின்றது என்றவாறு அபிப்பிராயங்களை வெளியிட்டுவருகின்றனர்.

வடக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் யாரென்னும் கேள்வி அண்மைக்காலமாக நீடித்துவருகின்றது. அவ்வப்போது இந்த விவகாரம் ஊடகங்களில் பேசுபொருளாகின்றது. மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால், மாவை சேனாதிராசாதான் முதல்வர் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட்டின் தலைவர் சித்தார்த்தன் அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால், இதுதொடர்பில் ஏனையவர்களின் நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை. மாவை சேனாதிராசா ஒருபுறமென்றால், பிறிதொரு குழுவினர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தேசிய அமைப்பாளர், வி. மணிவண்ணின் பெயரை உச்சரிக்கின்றனர். இன்னும் சிலரோ, முன்னர் விக்னேஸ்வரனை வெளியிலிருந்து இறக்குமதி செய்தமைபோன்று, 30 வருடங்கள் இலங்கை அரசின்கீழ் பணியாற்றிவிட்டு ஓய்வுபெற்றிருக்கும் எவரையாவது இறக்குமதி செய்யலாமென்று கூறிவருகின்றனர்.

இந்த நிலையில், தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், நீரோ மன்னனை நினைவுபடுத்தும் வகையில், ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். அதாவது, இணைந்த வடக்கு – கிழக்கில் தான் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன் – என அவர் தெரிவித்திருக்கிறாரென செய்தியொன்று வெளியாகியிருக்கின்றது. மட்டக்களப்பு ஊடக மையத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்திருக்கின்றார். முதல் பார்வையில் இது ஒரு நல்ல நகைச்சுவை. இரண்டாவது பார்வையில் தமழ் அரசு கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், எந்தளவிற்கு கட்டமைப்பு சார்ந்து பலவீனமாக இருக்கின்றது என்பதற்கு இது ஒரு வலுவான சான்றாகும். வடக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் விவாதம் போய், தற்போது இணைந்த வடக்கு – கிழக்கு மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் பேசுமளவிற்கு தமிழ் அரசியல், கோமாளித்தனமான ஒன்றாகிக்கொண்டிருக்கின்றது.

முதலில் இருக்கின்ற சூழலை எவ்வாறு கையாளுவதென்று தெரியாதவர்கள், வருமா அல்லது வராதா என்னும் நிச்சயமற்ற விடயங்கள் தொடர்பில் பேச முற்படுகின்றனர். உண்மையில், இவ்வாறான கருத்துக்கள் தமிழ் அரசு கட்சியின் தலைமையின் பலவீனத்தையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் பலவீனத்தையுமே மீண்டும், மீண்டும் மக்கள் மத்தியில் காட்சிப்படுத்துகின்றன.

# இந்தியாவை சீண்டும் சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம்



- அலசுவது **இராஜதந்திரி** -

அமெரிக்காவின் சர்வதேச பிரபலம் பெற்ற ‘ரைம்’ சஞ்சிகை தனது இவ்வார வெளியீட்டின் அட்டைப் படத்தில் இந்தியாவில் கொரோனா வியாதியினால் இறந்தோரது சடலங்களை மயானங்களில் எரியூட்டும் படம் ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

உலகளாவிய ரீதியல் கொவிட்-19 வியாதி பரவ ஆரம்பித்து இருவருடங்களை நெருங்கவுள்ள நிலையில், ரைம் சஞ்சிகை இந்தியாவில் கொவிட் அவலம் குறித்த படத்தை பிரசுரித்திருப்பது, இந்தியாவில் கொவிட் வியாதியின் தாக்கம் எவ்வளவு தூரம் தாண்டவமாடுகின்றதென்பதையே வெளிப்படுத்துகின்றது.

இந்தியா கொவிட்-19 வியாதியினால் திணறிக்கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே இலங்கைக்கு சீன பாதுகாப்பமைச்சர் ஜெனரல் வே பங்கெற் இரு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தியாவின் வடக்கே லடாக் மலைப்பிரதேசத்தில் இந்தியாவும் சீனாவும் எல்லைப்பிரச்னை காரணமாக முரண்டுபிடித்ததோடு, இருதரப்பும் அவ்வப்போது பரஸ்பர தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு உயிரிழப்புகளுக்கும் இடமளித்திருந்தன.

இந்தியாவின் கிழக்கே அருணாசல பிரதேசம் முதல் வடக்கே லடாக் மலைச்சாரல்கள் வரை இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையேயான எல்லைப் பிரதேசங்கள் காணப்படுவதோடு, அவ்வப்போது இருநாடுகளும் முறுகல் நிலையிலிருப்பதையும் அவதானிக்க முடியும்.

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே முறுகல் நிலை தோன்றிய பின்னணியிலேயே சீனாவின் வுஹான் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற கொரோனா வியாதி இன்று முழு உலகையும் உலுப்பி வருகின்றது. அத்துடன், இந்தியாவை விரைந்து சுடுகாடாக்கி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

சீனாவின் வுஹான் பிரதேசத்தில் உருவான கொரோனா வியாதி சீனாவில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி இதுவரை எதுவும் பெரியளவில் வெளியுலகுக்குத்தெரியாதுள்ளது.

சீனாவில் ஊடக சுதந்திரம் காணப்படாமையும், வெளி உலக ஊடகத்துறையினருக்கு சீனாவில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

ஆனால், இந்தியாவைப்பொறுத்தவரை, எதுவுமே ஒளிவு மறைவின்றி அந்நாட்டின் கொரோனா தாக்கம் பற்றிய தகவல்கள் உலகம் முழுவதும் சென்றடைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

**சீனா பாதுகாப்பமைச்சர்**

இத்தகைய சூழ்நிலையிலேயே சீன பாதுகாப்பமைச்சர் இலங்கைக்கு இருதினங்களுக்கு முன்னர் விஜயம் செய்திருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை சீனா பொருளாதார ரீதியாகவும் பிராந்திய அரசியலைப்பொறுத்தவரையில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகவும் இருக்கின்றது.

கொழும்பு காலிமுகத்திடல் கரையோரத்துக்கு அப்பால் கடலுக்கு நடுவில் அமைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரம், சீனாவின் பொருளாதார ரீதியான வளர்ச்சியை இலங்கையில் பிரதிபலிக்கச்செய்வதாக இருக்கின்றது.

சீனாவின் ஒரு மாநிலத்தைவிட குறைவான நில விஸ்தீரணத்துடன் காணப்படும் இலங்கைக்கு சீனாவின் நிதி ஒதுக்கீடு மற்றும் கடனுதவி என்பவை அந்நாட்டைப் பொறுத்தவரை மிகத் துச்சமானதாகவே இருக்கின்றது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற தறுவாயிலேயே இந்தியாவும், சீனாவும் இலங்கையில் தமது செல்வாக்கைச் செலுத்துவதில் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டிருந்தன.

**சீனாவின் செல்வாக்கு**

ஆனால், இப்போட்டியில் சீனாவின் கை ஓங்கியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இதற்குக் காரணம், சீனாவின் பொருளாதார பலம் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று உலகில் பொருளாதார ரீதியாக மிகப் பலம் பொருந்திய நாடாக சீனா காணப்படுவதோடு, மேற்குலக நாடுகளுக்கு சவால் விடுவதாகவும் இருக்கின்றது.

இந்தியாவும் இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தது. ஆனால், வடக்கிற்கும், தெற்கிற்குமிடையே ரயில் பாதையை மீளவும் அமைக்கும் விதத்திலேயே இந்தியாவின் உதவி காணப்பட்டிருந்தது. ஆனால், சீனா இலங்கையின் மேற்குக் கரையோரத்தின் புவியியல் அமைப்பையே புதிதாக மாற்றியமைக்கும் விதத்தில் தனது கைவரிசையை காண்பித்துள்ளது.

எனவே, இந்தியாவில் கொரோனா நோயின் தாக்கம் மிகமோசமாக இருக்கின்ற நிலையில், முழு உலகுமே இந்தியாவுக்கு உதவுவதிலேயே தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

கொவிட் தடுப்பூசி மருந்து வகைகளை இந்தியாவுக்கு அனுப்பி வைப்பதிலும், கொரோனாவினால் பாதிக்கப்பட்டு அவஸ்தைக்குட்பட்டுள்ள நோயாளிகளுக்கு ஒட்சிசன் வழங்குவதிலும் உலக நாடுகள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றன.

இத்தகைய தருணத்தில், இந்தியாவின் அயல் நாடான இலங்கைக்கு சீனாவின் ஆட்சிப்பீடத்தில் மிகப்பலம் பொருந்தியவர்களில் ஒருவராக இருக்கும் சீன பாதுகாப்பமைச்சர் ஜெனரல் வே பங்கெற்றின் இலங்கை விஜயம், இந்தியாவை சீண்டிவிடுவதாகவும் இருக்கின்றதோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
யாரைப் பற்றியும் வம்பு பேசாதவர்களுக்குப் பிரச்னை வராது. நகைச்சுவை என்று பேசுவது தவறாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கடன் பிரச்னை பற்றிய பயம் நீங்கும். தாழ்த்திப் பேசியவர் மாறுவார்.

**இடபம்**
நல்லவர் நட்பு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். எதிர்ப்பு அடங்கும். வழக்கு சாதகமாகும். மகன் பற்றிய கவலை நீங்கும். தோலில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கற்பனை பயம் தீரும்.

**மிதுனம்**
மறு முயற்சியில் வெளிநாடு செல்ல வீஸா கிடைத்து மகிழ்வீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த தொந்தரவுகள் நீங்கும். சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வந்து விழிப்பீர்கள்.

**கடகம்**
பேச்சில் கட்டுப்பாடு தேவை. திடீர் பயணம் வரும். சுபநிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். அந்தஸ்து உயரும். பொதுநல செய்கைகளில் ஈடுபட்டு புகழ் அடைவீர்கள்.

**சிம்மம்**
உயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புது வேலை கிடைக்கும். உங்களை அலட்சியமாக நினைத்தவர்கள் வியப்பார்கள். மேலதிகாரிகளிடம் பாராட்டு பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கன்னி**
வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளுக்கு வெளிநாட்டில் வேலை கிடைப்பதால் மகிழ்வீர்கள். கோயிலுக்குச் சென்று நேர்த்திக்கடனை முடிப்பீர்கள்.

**துலாம்**
மனதில் உள்ள குழப்பம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். மகிழ்ச்சி கூடும். வீடு களைகட்டும். கனிவான பேச்சால் வெற்றி பெறுவீர்கள்.

**விருட்சிகம்**
வீட்டில் நடைபெறும் விசேஷத்தால் சொந்த பந்தங்கள் தேடி வருவர். புதிய கலைகளைக் கற்பதிலோ, ரசிப்பதிலோ ஆர்வம் வரும். குடும்பத்திலும், அலுவலகத்திலும் மகிழ்வான சூழல் நிலவும்.

**தனுசு**
புதிய பதவி உங்களை தேடி வரும். கவலைகள் மறையும். வேலையில்லாதவர்களுக்கு இன்று நல்ல வேலை கிடைக்கும். அரசாங்க அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். நன்மை விளையும்.

**மகரம்**
தைரியம் என்பது எல்லைமீறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பழி ஏற்படுத்தக்கூடிய தீய செயல்களை செய்ய வேண்டாம், செயலில் தாமதம் ஏற்பட்டாலும் நல்லபடியாக முடியும்.

**கும்பம்**
பிள்ளைகளின் வாழ்வில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். வாழ்க்கைத்துணைக்கு திடீர் நன்மைகள் ஏற்பட்டு வியப்பூட்டும். பணியிடத்தில் தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள்.

**மீனம்**
திட்டமிட்ட விஷயங்கள் நல்லபடியாக நடக்கும். நிம்மதி கூடும். நல்லுறவு பற்றிய முயற்சிகளில் சிறந்த பலன்கள் ஏற்படும். முயற்சியில் வெல்வீர்கள். மேலதிகாரியை அனுசரித்து செல்வீர்கள்.

# தமிழ்நாட்டை உலுக்கும் கொரோனா!

## ஒரே நாளில் 98 பேர் பலி! 17 ஆயிரம் பேர் பாதிப்பு!!

*சென்னை, ஏப். 30*

தமிழ்நாட்டில் கொரோனா தொற்று தொடர் அதிகரிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில் 24 மணி நேரத்தில் 98 பேர் பலியாகினர். அத்துடன் சுமார் 17 ஆயிரம் பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை வரையான நிலவரத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் மலையுடனான கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் தொற்றுதியானவர்களது எண்ணிக்கை 16 ஆயிரத்து 665 ஆக பதிவாகி புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 4 ஆயிரத்து 647 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் சிகிச்சை பலனின்றி 32 பேர் அங்கு உயிரிழந்தனர்.

இதன்மூலம் சென்னையில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 3 இலட்சத்து 23 ஆயிரத்து 452 ஆகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 661 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 11 இலட்சத்து 30 ஆயிரத்து 167 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் சிகிச்சை பலனின்றி மேலும் 98 பேர் உயிரிழந்துள்ளதை அடுத்து இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 826 ஆக உயர்ந்துள்ளது.

இதையடுத்து தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களது எண்ணிக்கை ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 308 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பை பலப்படுத்த அ.தி.மு.க. கோரிக்கை

*சென்னை, ஏப். 30*

'வாக்கு எண்ணும் மையங்கள் அனைத்திலும், பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும். வாக்கு எண்ணும் முகவர்கள், முழு உடல் பரிசோதனைக்கு பிறகே, அனுமதிக்கப்பட வேண்டும்' என, அ.தி.மு.க., சார்பில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம், மனு அளிக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க., வழக்கறிஞர் பிரிவு இணை செயலர் பாபு முருகவேல் அளித்துள்ள மனுவில்-

வேலுார் மாவட்டம், காட்பாடி தொகுதியில், அ.தி.மு.க., வேட்பாளர் ராமுவின் வெற்றி பிரகாசமாக உள்ளது. எனவே, அங்கு வாக்குஎண்ணும் மையத்தில், கலவரத்தை ஏற்படுத்தி, வாக்குப்பதிவு இயந்திரங்களை சேதப்படுத்த, தி.மு.க., வேட்பாளர் துரைமுருகனின் மகனான, வேலுார் எம்.பி., கதிர்ஆனந்த், தன் ஆதரவாளர்களிடம் பேசினாரென, தகவல் கிடைத்துள்ளது. எனவே, அங்கு பாதுகாப்பை அதிகப்படுத்த வேண்டும்.

இதேபோல, அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும், பாதுகாப்பை பலப்படுத்தவேண்டும். எந்த சூழ்நிலையிலும், வாக்கு எண்ணும் மையங்களில், வன்முறையை அனுமதிக்கக்கூடாது. வன்முறையில் ஈடுபடுவோர் மீது, குண்டர்சட்டம்பாயக்கூடிய அளவிற்கு, சட்டம் கடுமையாக அமல்படுத்தப்படும் என, அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கும், சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்-என்று கூறப்பட்டுள்ளது.

# ஸ்டெர்லைட் ஆலையை திறப்பதற்கு கடும் எதிர்ப்பு

*சென்னை, ஏப். 30*




ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்திக்கு அனுமதி வழங்கிய மத்திய மாநில அரசுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பண்டாரம்பட்டி கிராமத்தில் வீடுகளில் கருப்புக்கொடி கட்டி, வீட்டு வாசல்களில் BAN STERLITE என கோலமிட்டு அப்பகுதி கிராம மக்கள் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்திக்கு அனுமதி அளிப்பதை கண்டித்து இன்று கறுப்பு தினமாக அனுசரிக்க ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு அழைப்பு விடுத்தது.

இதனால் வீடுகள் முன்பு ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோலமிடவும், தெருக்களில் கறுப்பு கொடி கட்டவும், சட்டைகளில் கறுப்புபட்டி அணிந்து வேலைக்கு செல்லவும், வட்சப் உள்ளிட்ட தளங்களில் மாலை மூன்று மணி நேரம் மட்டும் கறுப்பு நிறத் தில் புரொபைல் படம் வைக்கவும் கேட்டு கொள்ளப்பட்டது.

இதைத்தொடர்ந்து, ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கிய மத்திய மாநில அரசுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பண்டாரம்பட்டி கிராமத்தில் வீடுகளில் கருப்புக் கொடி கட்டி, வாசல்களில் BAN STERLITE என கோலமிட்டு தங்கள் எதிர்ப்புகளை அப்பகுதி கிராம மக்கள் பதிவு செய்து வருகின்றனர்.

## தடுப்பூசி குறித்து வதந்தி

# மன்சூர் அலிகானுக்கு ரூ.2 இலட்சம் அபராதம்



*சென்னை, ஏப். 30*

கொரோனா தடுப்பூசி குறித்து வதந்தி பரப்பிய நடிகர் மன்சூர் அலிகானுக்கு ரூபாய் 2 இலட்சம் அபராதம் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய முன்பிணை வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நடிகர் விவேக் மாரடைப்பு காரணமாக ஏப்ரல் 16ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மறுநாள் அதிகாலை 4.35 மணி அளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாரடைப்பு ஏற்படுவதற்கு முதல் நாள் நடிகர் விவேக் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.

இதுகுறித்து சமூக வலைத்தளங்களில் பல்வேறு வதந்திகள் பரவின. ஆனால், விவேக் இறப்பிற்கும், தடுப்பூசிக்கும் சம்பந்தமில்லை என மருத்துவர்களும், சுகாதாரத்துறை அதிகாரிகளும் விளக்கமளித்தனர். இதற்கிடையே விவேக்கின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற நடிகர் மன்சூர் அலிகான், தடுப்பூசி குறித்து தவறான தகவல்களை அளித்து பேட்டியளித்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனையடுத்து, கோடம்பாக்கம் மண்டல மருத்துவ அதிகாரி பூபேஷ், நடிகர் மன்சூர் அலிகான் மீது வடபழனி பொலிஸில் முறைப்பாடு அளித்தார். இந்த முறைப்பாடு அடிப்படையில், மன்சூர் அலிகான் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மன்சூர் அலிகான், முன் பிணை கோரி தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது. பின்னர், முன்பிணை கோரியும், வழக்கை ரத்து செய்யக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி தண்டபாணி, மன்சூர் அலிகானுக்கு நிபந்தனையுடன் கூடிய முன்பிணை வழங்கியுள்ளார். மேலும், அபராதமாக சுகாதாரத்துறைச் செயலாளர் பெயரில் ரூ.2 லட்சம் கொரோனா தடுப்பூசி வாங்க நிதியாக வழங்க வேண்டும் என்றும், கொரோனா தடுப்பூசி குறித்து எவ்வித வதந்தியும் பரப்பக்கூடாது, பதற்றத்தை உருவாக்கக் கூடாது என்றும் நிபந்தனை பிறப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிரூட்டப்பட்ட இடங்களில் பணியாற்றுவது ஆபத்தானது

## சுதத் சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, ஏப்.30

குளிரூட்டப்பட்ட அலுவலகங்கள் அல்லது இடங்களில் கடமைகளைச் செய்யும்போது ஒருவர் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொவிட்-19 நிலைமைகளுக்கு மத்தியில் மூடிய அறைகளுக்குள் தொழில் செய்வது மிகவும் ஆபத்தானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நபர் யன்னல்கள் மற்றும் கதவுகளை மூடியிருக்கும் ஒரு சிறிய அறையில் இருந்தால், குறிப்பாக குளிரூட்டப்பட்ட பகுதியில், இந்த நோய் மற்றொரு நபருக்கு பரவ அதிகம் வாய்ப்புள்ளது.

எனவே இது போன்ற இடங்களில் யன்னல்கள் மற்றும் கதவுகளை முடிந்தவரை திறந்து வைக்குமாறு பரிந்துரைக்கிறோம்.

மேலும் அத்தகைய இடங்களில் முகக் கவசம் அணிவது, கைகளை சவர்க்கரமிட்டு கழுவுதல் போன்ற சுகாதார வழிகாட்டல்களை அவசியம் கடைபிடிக்குமாறும் வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)



# ஹரீன் பெர்னாண்டோவை சந்தித்தார் மனோ எம்.பி.

கொழும்பு, ஏப். 30

சுகவீனம் காரணமாக கொழும்பு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரான மனோ கணேசன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உதயா ஆகியோர் சந்தித்துள்ளனர்.

இதன்போது ஹரீன் பெர்னாண்டோவின் உடலநலம் குறித்து கேட்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் கம்பஹாவில் வீடுகளில் முடங்கினர்

கொழும்பு, ஏப். 30

கம்பஹா மாவட்டத்தின் 15 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 185 பேர், கடந்த ஐந்து நாள்களாக அவர்களது வீடுகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களில் தொற்றாளர்கள் நிரம்பி வழிவதால், புதிய தொற்றாளர்களை சிகிச்சைகளுக்காக அனுமதிப்பதற்கு இடவசதிகள் இல்லை எனவும், ஆனால் தொற்றாளர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டிருப்பது கடுமையான நிலைமை எனவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், தொற்றாளர்களை அவர்களது வீடுகளிலேயே தங்க வைக்கப்பட்டிருப்பதால் வீட்டிலுள்ள ஏனையோருக்கும் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துக் காணப்படுகிறது.

எனினும் இது தொடர்பில் பல தடவைகள் சுகாதாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் உரிய நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ)



# ராகலையில் பஸ் விபத்து!

## 20 இற்கும் மேற்பட்டோர் காயம்

கொழும்பு, ஏப். 30

நுவரெலியா, ராகலையிலிருந்து ஹெபோரஸ்ட் நோக்கி பயணித்த பஸ் நேற்று நண்பகல் மாகுடுகல பகுதியில் வைத்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 10 பேர்வரை நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனையோர்ஹைபோரஸ்ட் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# நானாட்டானில் பொறுப்பில்லாமல் நேற்று ஒன்று கூடிய பொதுமக்கள்

மன்னார், ஏப். 30

நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கான காணிப்பதிவு இடம்பெற்று வரும் நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை மக்கள் எவ்வித சுகாதார நடை முறைகளையும் பின்பற்றாமல் நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் கூடினர்.

இதனையடுத்து முருங்கன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் துரித நடவடிக்கைகளினால் அந்தப் பகுதியில் ஏற்பட இருந்த அபாய நிலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

சிறுபோக நெற் செய்கைக்கான காணிப்பதிவு சகல கமநல கேந்திர நிலையங்களிலும் இடம்பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் நேற்று வியாழக்கிழமை நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் மக்கள் எவ்வித சுகாதார நடை முறைகளையும் பின்பற்றாமல் கூடி நின்றனர்.

முகக் கவசங்கள் அணியாமலும் ,போதிய சமூக இடைவெளியை பின்பற்றாமலும் நூற்றுக்கும் அதிகமான மக்கள் அவ்விடத்தில் கூடி நின்றனர்.



இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக முருகன் பொது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரூபன் லெம்பேட்டின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. உடனடியாக விரைந்து செயல்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அவ்விடத்துக்கு பொது சுகாதாரப் பரிசோதகர்களை அனுப்பி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் மேற்கொண்ட காணிப் பதிவுகளை மேற்கொள்ள வந்த மக்களை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக முகக்கவசம் அணிய வைத்து சமூக இடைவெளியை கடைப்பிடிக்க துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனால், அப்பகுதியில் ஏற்பட இருந்த பாரிய அபாயம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேவையறிந்து மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு உடனடியாக செயல்பட்ட முருங்கன் பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கு நானாட்டான் பிரதேச மக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் நன்றி தெரிவித்தனர். (அ)

## நிலைமை மோசம்

# முழு நாட்டையும் உடன் முடக்கவும்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை



கொழும்பு, ஏப். 30

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டியுள்ளதால், தொற்றாளர்களை அடையாளம் காணும்வரையாவது முழு நாட்டையும் முடக்கவேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் அச்சுறுத்தலான நிலைமையே காணப்படுகின்றது. இதனை உரிய வகையில் முகாமை செய்யாவிட்டால் எல்லாம் கைமீறி சென்றுவிடும். இந்தியாவின் நிலைமை இங்கு உருவாகிவிடும். எனவேதான் நாட்டை முடக்குமாறு கோருகின்றோம்.

அதேவேளை, பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். அரசும் உடன் கொள்கை ரீதியிலான முடிவுகளை எடுக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவராமின் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

வவுனியா, ஏப். 30

2005ஆம் ஆண்டு படு கொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரெட்ணம் சிவராமின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சு. வரதகுமார் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அகவணக்கத்துடன் ஆரம்ப மாகிய நிகழ்வில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. சிவராம் தொடர்பான நினைவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் ந. கபிலநாத் நிகழ்த்தியிருந்தார்.

நிகழ்வில் வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# நடமாடும் வைத்தியசாலைகளை நாட்டில் உடனடியாக அமையுங்கள்

## எரான் விக்கிரமரத்ன எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஏப். 30

**உலக நாடுகளில் தற்போது காணப்படும் நிலைமைக்கு அமைய வெளிநாடுகளில் சென்று சிகிச்சை பெற முடியாது. எனவே நாட்டில் மருத்துவ கட்டமைப்பை ஸ்திரப்படுத்தும் வகையில் தீவிர சிகிச்சை பிரிவுகளின் எண்ணிக்கையை அதி கரிப்பதோடு, நடமாடும் வைத்திய சாலைகளை உருவாக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையில் 15 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசியை வழங்கு வதற்கு 15 பில்லியன் தேவைப் படுகிறது. சீனி வரி குறைப்பின் மூலம் பாரிய மோசடி இடம் பெற்றிருக்காவிட்டால் அதன் மூலம் தடுப்பூசியைப் பெற்றிருக்க முடியும். இவ்வாறான நிலையில் இலங்கையில் தற்போது நிலைமாறிய வீரியம் மிக்க வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. சிவப்பு எச்சரிக்கை காணப்படும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

எனவே இப்போதாவது தீவிர சிகிச்சைப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கு மாறு கோருகின்றோம். அத்தோடு நடமாடும் வைத்திய சாலைகளையும் நிறுவுமாறு வலியுறுத்துகின்றோம். அத்தோடு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளையும் மேலதிகமாக கொள்வனவு செய்யுமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

இலங்கையில் மருத்துவ கட்டமைப்பை ஸ்திரப்படுத்த உதவுமாறு நட்பு நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பின் போது கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார்.

# ரிஷாத்தை விடுவிக்குமாறு கோரி மன்னாரில் நேற்று ஆர்ப்பாட்டம்





மன்னார், ஏப். 30

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யக் கோரி மன்னாரில் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் அதிகாலை யில் கைது செய்யப்பட்டதையிட்டு வேதனையடைவதாகவும், பாராளுமன்ற உறுப்பினரான அவரை கைது செய்வதாகச் சபாநாய கருக்குக் கூட அறிவித்தல் விடுக்கப்படவில்லை எனவும், இந்தக் கைதை வண்மையாக கண்டிப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் தன் தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுப்பதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

எனவே ஜனாதிபதி,பிரதமர், சக பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ரிஷாத் பதியுதீனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

(அ)




# 'நானோ' முகக்கவசம் உருவாக்கிய பேராதனைப் பல்கலைக்கழகம்

கொழும்பு, ஏப். 30

பேராதனை பல்கலைக்கழ கத்தின் மருத்துவவியல் ஆராய்ச்சி குழுவினரால் புதிய கொவிட்-19 சோதனைக் கருவி மற்றும் முகக்கவசங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை சதொச மற்றும் அரச வர்த்தக பொதுக் கழகங் கள் வழியாக இதனை சந்தைப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு வைரஸ் அல் லது பற்றீயாவையும் கொல் லக்கூடிய நானோ - வடிகட்டு தலை முகக் கவசம் கொண் டுள்ளதாகவும், இவை குறைந் தது 25 முறை கழுவிப் பயன் படுத்தக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதன் மற்றொரு சிறப்பு யாதெனில் காபனீரொட்சைட் நுழைய அனுமதிக்காமல் இருப் பது ஆகும்.

# கிளிநொச்சியில் தொற்று வேகமாக பரவும் அபாயம்!

## மக்களுக்கு பொலிஸ் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஏப். 30

கிளிநொச்சி நீதிமன்றம் முன் பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத மக்களால் கொவிட் 19 வேகமாக பரவும் அபாயம் காணப்படுகின்றது. நேற்றுக் காலை முதல் கிளிநொச்சி பொலிஸார் முகக் கவசம் அணி யாது நடந்து கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தலை ஒலிபெருக்கு மூலம் விடுத்து வருகின்றனர்.

ஆயினும் பொது மக்கள் கொவிட் 19 அச்சுறுத்தல் தொடர்பில் கவலையின்றி செயற்பட்டு வருகின்றனர். நேற்று காலைமுதல் கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றம் முன்பாக இவ்வாறு பெருந்திரளான மக்கள் சமூக இடைவெளியின்றி குவிந்து காணப்பட்டனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக் காக வருகை தந்த மக்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உள்ளே அனுமதித் துள்ளது. பிணை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த மக்கள் இவ்வாறு நீதிமன்ற வெளி வளாகத்தில் கூடி நின்ற னர். ஏ-9 வீதியில் இவ்வாறு கூடி நிற்கும் மக்களை சுகாதார தரப்பினர் கட்டுப்படுத்த அல்லது மாற்று நடவடிக்கை களை முன்னெடுக்க வேண்டும் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்த அழகுசாதனப் பொருட்கள் பறிமுதல்

கொழும்பு, ஏப். 30

மூன்று கொள்கலன்களின் மூலம் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட விலை யுயர்ந்த ஒரு தொகை அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பாதணிகளை கொழும்புத்துறை முகத்தில் சுங்கம் பறிமுதல் செய்துள்ளது.

சுங்க வருவாய் கண்காணிப் புப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த கொள்கலன்களை பரீட்சிக்கும் போதே அவை பறிமுதல் செய் யப்பட்டன. அவற்றின் பெறு மதி சுமார் 1.2 கோடி ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த பொருள்களை இறக்கு மதி செய்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக சுங்க ஊடக பேச்சாளர், பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதத் டி சில்வா தெரிவித்தார்.

# இடியுடன் கூடிய மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஏப். 30

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந் தோட்டை ஊடாக பொத்து வில் வரையான கடற்பரப்பு களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டல வியல் திணைக்களம் நேற்று காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரை யான கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசை யிலிருந்து வீசக்கூடும். நாட் டைச் சூழவுள்ள ஏனைய கடற் பரப்புகளில் காற்றானது வட கிழக்கு அல்லது மாறுபட்ட திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 20-30 கிலோ மீற்றர் வரை காணப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வங்கிகளுக்கு இன்று விசேட விடுமுறை

கொழும்பு, ஏப். 30

வங்கிகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை அரை நாள் விடுமுறை தினமாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே முதலாம் திகதி சனிக்கிழமையன்று, சர்வதேச உழைப்பாளர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இதன் காரணமாக அனைத்து வங்கிகளுக்கும் இன்று விசேட அரை நாள் விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தை இன்று மதியம் 12.30 மணி வரை மட்டுமே திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த திறந்துள்ள கதவால் வெளியேறி எங்களுடன் வந்து இணைந்துகொள்ளுங்கள்

## அரச அதிருப்தியாளர்களை அழைக்கிறார் சஜித்



கொழும்பு, ஏப். 30

**மஹிந்த ராஜபக்ஷ திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி அரசின் அதிருப்தியாளர்கள் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேறி எம்முடன் இணைந்துகொள்ளுங்கள். விரைவில் மலரும் எமது ஜனநாயக ஆட்சியில் பங்காளிகளாகுங்கள் - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

'அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் மஹிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் உள்வீட்டுப் பிரச்னை இன்று பூகம்பமாகி வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பிரதமர் மஹிந்தவின் இந்தக் கருத்துக்களிலிருந்து அரசின் குழப்பங்கள் சந்திக்கு வந்துள்ளன.

தனக்கு கீழ் இருக்கின்ற அமைச்சர்களையும், பங்காளிக் கட்சி தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாத பிரதமர் இந்த நாட்டை எப்படி முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லப் போகின்றார்.

அரசு ஆட்டம் காணத் தொடங்கியுள்ள இந்தச் சூழலில்தான் பிரதமரின் சீற்றமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அரச தலைமை ஒழுங்கான பாதையில் பயணித்திருந்தால் அதற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது.

பிரதமர் மஹிந்த திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி வெளியேற விரும்புவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம். நாட்டு மக்கள் விரும்புகின்ற சர்வதேசம் திரும்பிப் பார்க்கின்ற நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய பலம் மிக்க ஜனநாயக ஆட்சியை நிறுவ நாம் தயாராக இருக்கின்றோம். அது விரைவில் மலரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. எனவே, அரசிலுள்ள அதிருப்தியாளர்களுக்கு எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கும் பலம்மிக்க ஆட்சியை நிறுவ நான் அழைப்பு விடுக்கின்றேன்- என்றார்.

# மேல் மாகாணத்துக்குள் நுழைவோரிடம் நேற்று முதல் அன்ரிஜென் பரிசோதனை

கொழும்பு, ஏப். 30

கொரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக நேற்று முதல் கொழும்பு உட்பட மேல் மாகாணத்துக்குள் நுழைவோர் மற்றும் அங்கிருந்து வெளியேறுவோரிடம் எழுமாற்றாக கொரோனா தொற்றைக் கண்டறியும் அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் 12 மணி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வந்தது என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரோஹண அறிவித்துள்ளார்.

இந்த பரிசோதனைகளை முன்னெடுப்பதற்காக கொழும்புக்குள் நுழைந்து, வெளியேறும் 12 பகுதிகளில் நேற்று முதல் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தப் பகுதிகளில் இராணுவத்தினர், மற்றும் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.



# 240 கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், ஏப் 30

மாதகல் கடற்பரப்பை அண்மித்து சில்லாலையில் 240 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சில்லாலையில் தேடுதல் மேற்கொண்டபோது கவனிப்பாரற்று காணப்பட்ட பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 240 கிலோ கஞ்சா காணப்பட்டதை அவதானித்த கடற்படையினர் அதனை நேற்று முன்தினம் காலை மீட்டனர்.

சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டதையடுத்து நீதிமன்ற உத்தரவின்பேரில் நேற்று முன் தினம் மாலை கைப்பற்றப்பட்ட 240 கிலோ கேரள கஞ்சா யாவும் கொரோனா அச்சம் காரணமாக கடற்படையினரால் தீயிட்டு அழிக்கப்பட்டன. இவை இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

(அ)

# பிரிட்டனில் பரவிவரும் வைரஸ் இங்கு மேலும் சில பகுதிகளில்!

கொழும்பு, ஏப். 30

பிரிட்டனில் பரவும் பி.1.1.1 என்ற உரு திரிபடைந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள மேலும் சிலர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காலி மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பரவும் கொரோனா வைரஸின் பிறழ்வு பிரிட்டனில் பரவிய புதிய வகை கொரோனா வைரஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் அறிவித்திருந்தார்.

கொழும்பு, பொரலஸ்கமுவ மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளிலிருந்து இந்த விடயம் குறித்து கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கொரோனா தொற்றின் அழிவை இந்தியா விரைவில் முறியடிக்கும்

## மோடிக்கு ஜனாதிபதி கடிதம்

கொழும்பு, ஏப். 30

உங்களது திறமையான தலைமையின் கீழும் அர்ப்பணிப்புள்ள நிபுணர்களின் உறுதியான ஆதரவோடும் இந்தியா விரைவில் நோய்க் கிருமியின் தற்போதைய அழிவைத் தடுக்கும் என்று நான் நம்புகிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று நோயின் தற்போதைய அழிவை இந்தியா விரைவில் முறியடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இந்தியாவின் சுகாதாரத் துன்பம் மக்களுக்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார்.

இலங்கையில் உள்ள நாட்டின் புத்த மதகுருமார்கள் 'இந்திய மக்களுக்கு ஆசிர்வதிக்க' ரத்னா சூத்ராவை 'கருணையுடன் பாராயணம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இது நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பையும் உறவையும் நிரூபிக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# சீன பாதுகாப்பு அமைச்சர் நாடு திரும்பினார்

கொழும்பு, ஏப். 30

சீன பாதுகாப்பு அமைச்சர் வே பெங்கெற் இலங்கைக் கான பயணம் நேற்று நிறைவடைந்தது.

இரண்டு நாட்கள் உத்தி யோகபூர்வ விஜயம் மேற் கொண்டு கடந்த செவ்வாய் இரவு இலங்கைக்கு வந்த அவர், நேற்றுநாட்டில் இருந்து வெளியேறினாரென அறிவிக்கப்பட் டது.

நாட்டுக்கு விஜயம் செய்த சீன பாதுகாப்பு அமைச்சர், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மற்றும் பிரமருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி கோட்டா பயவை சந்தித்த அவர், குறித்த சந்திப்பின் ஊடாக இரு நாட்டுக்கும் இடையிலான தொடர்பு மேலும் வலுப்பெற்றதாக தெரிவித்திருந்தார். அதன்பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரையும் சந்தித்து அவர் பேச்சில் ஈடுபட்டார்.

ஒக்ரோபரில் சீனாவின் மூத்த இராஜதந்திரி யாங் ஜேசே விஜயத்தைத் தொடர்ந்து சீன இராஜதந்திரி ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட இரண்டாவது உயர்மட்ட விஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசியின் 2ஆவது ஊசி செலுத்தும் பணி கிளிநொச்சி வைத்தியசாலையில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 30

கொவிட் 19 தடுப்பூசியின் 2ஆவது ஊசி செலுத்தும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் முதல் கட்டப் பணிகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் இடம்பெற்றன.

அதற்கு அமைவாக கிளிநொச்சி வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர், சுகாதார ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது.

முதலாவது தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி முதல்கட்டமாக நேற்று செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டில்லி கொரோனா மரணங்கள்:

# புள்ளிவிவரம் மறைத்தாலும் எரியும் சடலங்கள் கூறும் கொடுமை

ஜுபைர் அஹமத்
டில்லி

இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் சிதைகள் ஒரே நேரத்தில் இப்படி எரிவதை நான் முதல் முறையாகக் காண்கிறேன்.

ஒரே நாளில், டில்லியின் மூன்று மயானங்களில் கண்ட இந்த துக்கமும் வேதனையும் நிறைந்த கொடூரக் காட்சி மனதை உருக்கு வதாக உள்ளது. எரிகிறவை அனைத்தும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்க ளின் சடலங்கள்.

சனிக்கிழமையன்று, டில்லி மருத்துவமனைகளில் ஒட்சிசன், ஐ.சி.யூ படுக்கைகள், வென்டிலேட்டர்கள் மற்றும் மருந்துகளுக்காக மக்கள் போராடுவதை நான் கண்டேன். கண்ணீருடன் இறுதி மூச்சு விட்ட பலரின் உறவினர்களை நான் பார்த்தேன். திங்களன்று மயானங்களில், முதியவர்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டோம். சிதைக்குத் தீயூட்ட, தங்களின் முறைக்காகக் காத்திருக்கும் கொடுமையைப் பார்த்தேன். மயானங்களில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதால், திறந்த வெளியில் தற்காலிக தகன மேடைகள் அமைக்கப்பட்டு, அடுத்து வரும் சடலங்களுக்கு இடம் தயார் செய்யப்படும் கொடுமையையும் பார்த்தேன்.

தற்சமயம், டில்லியில், ஒவ்வொரு நாளும் கொவிட் 19ஆல் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை, 350 முதல் 400 வரை என்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு சில மணி நேரத்திற்குள் மூன்று மயானங்களிலுமாக, 100 க்கும் மேற்பட்ட சிதைகள் எரிவதைக் கண்டேன்.

சராய் காலே கானில் வட்டச் சாலையை ஒட்டியிருக்கும், ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில், ஒரு மின் மயானம் உள்ளது. ஒருபுறம், ஒரே நேரத்தில் பல சிதைகள் எரிந்து கொண்டிருந்தன. மறுபுறம் இனி வரும் இறந்த உடல்களின் தகனத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. உறவினர்கள், ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் என்று ஒர் கூட்டமே இருந்தது. சுமார் 10-12 உடல்கள் ஒரே நேரத்தில் எரிக்கப்பட்டன.

இறுதிச் சடங்குகளை நடத்த, ஒரே ஒரு புரோகிதர் தான் அங்கு இருந்தார், அவரை அணுகிப் பேச முடியாத அளவுக்கு அவர் சுழன்று சுழன்று தனது பணியில் ஈடுபட்டிருந்தார்.

எனது தொலைபேசியிலிருந்து வீடியோக்களை எடுக்கத் தொடங் கியபோது, வெப்பம் காரணமாக தொலைபேசியும் முடங்கியது. ஐந்து நிமிடங்களில் இது போன்ற உயர் தரமான போன் கூட சூடாகிவிட்டதே, இந்தப் புரோகிதர் தொடர்ந்து எத்தனை நேரமாக இந்த எரியும் சிதைகளுக்கு நடுவில் நின்று கொண்டிருக்கிறார் என்று சிந்தித்தேன்.

அவர் அருகில் சென்று, ஒரு மணி நேரத்தில் எத்தனை சடலங் கள் வருகின்றன என்று கேட்டேன். அவர், என்னைப் பார்க்காமலே, “24 மணிநேரமும் சடலங்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன, எப்படி கணக்கு வைத்துக் கொள்ள முடியும்?' என்றார்.

ஒவ்வொரு சில நிமிடங்களுக்கும், சடலங்களைத் தாங்கிய அம்புலன்ஸ் வண்டிகள் ஒவ்வொன்றாக வந்து கொண்டிருக்கின்றன. என் தலையே சுற்ற ஆரம்பித்தது. நான் தீவிரவாத தாக்குதல்கள், கொலைகள் போன்ற சம்பவங்களைப் படம் பிடித்துள்ளேன். ஆனால், கூட்டமாக சிதைகள் எரிவதை இது வரை பார்த்ததில்லை.

சிதையிலிருந்து வெளிப்படும் தீயின் வெப்பம் ஒரு பக்கம். சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பம் ஒரு பக்கம். மேலும், தலையிலிருந்து கால் வரை மூடும் பிபிஇ ஆடையின் வெப்பம் என அங்கு நிற்பதே மிகவும் சிரமமாகிக் கொண்டிருந்தது. நான் கண்ட காட்சிகளும் என்னை உணர்ச்சி வசப்படுத்தின.

சிறிது நேரம் ஒரு ஓரமாக நின்றிருந்து விட்டு, நான் அங்கிருந்து வெளியே வந்த போது, ஒரு பெண் நிருபர், சற்று தூரத்தில், திறந்த வெளியில், ஒரு தற்காலிக தகன மேடை அமைக் கப்பட்டு வருவதாக என்னிடம் சொன்னார்.

நான் அங்கு சென்று பார்த்தபோது, பல தொழிலா ளர்கள் திறந்தவெளியில் தகன எரிப்புக்காக, 20-25 மேடைகளை அமைப்பதைக் கண்டேன். அங்கு வந்த ஒரு வர், கொவிட் உயிரிழப்புகள் வரும் நாட்களில் மேலும் அதிக ரிக்கும் என்பதால், அதற்கான முன்னேற்பாடு இது என்று கூறினார்.

லோதி சாலை மின் மயானத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. அதிக எண்ணிக்கையில் சிதைகளும் எரிந்து கொண்டிருந்தன. இறந்தவர்களின் உறவினர்கள் ஏராள மானோர் இருந்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அழுதுகொள்வதை நான் பார்த்தேன்.

அம்புலன்ஸ்கள் உள்ளே வந்து கொண்டிருந்தன, இறந்த உடல்கள் இறக்கி வைக்கப்பட்டன. கணக்கிட முடியவில்லை என்றாலும், ஒரே நேரத்தில் 20 முதல் 25 சிதைகள் எரிந்து கொண்டிருந்தன. பல உறவினர்கள் பிபிஇ கிட் அணிந்து வந்தனர்.

இது போன்ற கிட் அணிந்த ஒரு இளைஞர் அமைதியாக அருகில் ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்தார். தனது தந்தை திங்கள்கிழமை காலை கொவிட் காரண மாக இறந்துவிட்டதாக என்னிடம் கூறி னார். அவர் முன் கூட்டியே இங்கு வந்து அமர்ந்திருக்கிறார். அவரது சகோதரர், தந்தையின் உடலை மருத்துவமனையில் இருந்து கொண்டு வரவிருந்தார். சில கணங்கள் மௌனத்திற்குப் பிறகு அவர் கதறி அழுதார். அங்கு இருந்த சிலர் அவருக்கு ஆறுதல் கூற முற்பட்டனர்.

அங்கு இருந்த மக்கள் அனைவரும் தங்கள் உறவினர்களுக்குப் பிரியாவிடை கொடுக்கவே வந்திருந்தனர். எனவே இந்த நுட்பமான சந்தர்ப்பத்தில் அவர்கள் ஒருவருக் கொருவர் வலியைப் புரிந்துகொள்வது இயல்பானது.

**சீமாபுரி மயானத்தின் காட்சி**

சீமாபுரி மயானம் சற்று குறுகியது. ஆனா லும், அதிக எண்ணிக்கையில் அங்கு சடலங்கள் எரியூட்டப்பட்டுக்கொண்டிருந்தன. ஏற்கனவே இருந்த மேடைகள் போதாமல் புதிதாகச் சில அமைக்கப்பட்டிருந்தன.

உறவினர்கள் இறந்த உடல்களை அவர்களே கொண்டு வந்து, விறகுகளுக்கும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். ஆம்புலன்ஸ் சேவை யில் ஈடுபட்டிருந்த ஒரு பஜ்ரங்தள் இளைஞரை நான் அங்கே கண்டேன். 10 நாட்களாகத் தொடர்ந்து மருத்து வமனைகளில் இருந்து இறந்த உடல்களைக் கொண்டு வருவதாக அவர் என்னிடம் கூறினார். சீக்கியர்களின் ஒரு அமைப்பு இங்கு அனைத்து வகை யான வசதிகளையும் வழங்க முயற்சித்துக் கொண்டிருந் தது. ஆனால் மக்கள் கூட்டமும் அதிகமாக இருந்தது.

கடந்த சில நாட்களாகவே இங்கு நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதாகவும் இப்போது தகனத்திற்கு வேறு மயானம் கொண்டு செல்லும் படி மக்களைக் கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் ஒரு சர்தார் ஜி கூறினார். அவர் அங்கு சேவையில் ஈடுபட்டிருந்தார். சீமாபுரி மயா னத்தில், ஒவ்வொரு நாளும் 100 க்கும் மேற்பட்ட சிதை கள் எரியூட்டப்படுவதாக அவர் கூறினார். லோதி சாலை மயானத்திலிருந்து சற்று தொலைவில் இஸ்லாமியர் களின் கல்லறை ஒன்று உள்ளது. ஆனால் அங்கு, ஒரே ஒரு பிரார்த்தனைக் கூட்டம் தான் நடந்தது. ஓக்லாவில் உள்ள பட்லா ஹவுஸிலும் ஒரு கல்லறை உள்ளது.

அங்கு வசிக்கும் ஒருவருடன் தொலைபேசி யில் பேசியதில், முன்பு ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு பேரின் கல்லறைகள் அங்கு தோண்டப்பட்ட தாகவும், ஆனால் ஏப்ரல் மாதத்திலிருந்து தினமும் 20 முதல் 25 கல்லறைகள் தோண்டப்படுவதாகவும் கூறினார். அவர், “நேற்று நானே இரண்டு பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்து கொண்டேன்.” என்று கூறினார். ஐ.டி.ஓ.வில் டைம்ஸ் ஒப் இந்தியா கட்டடத்திற்குப் பின்புறம் ஒரு கல்லறை உள்ளது. இந்தக் கல்லறையில், இறந்தவர்கள் மீதும் பாகுபாடு காணப்பட்டது. கோவிட்டால் இறந்த வர்களின் கல்லறைகள் தனியாக ஒதுக்கப்பட்டன என்று அங்கு குழி தோண்டும் ஒரு தொழிலாளி கூறினார்.

கல்லறையின் ஒரு ஓரத்திற்கு அவர் என்னை அழைத் துச் சென்று காட்டினார். கொவிட் நோயால் உயிரிழக் கும் எத்தனை பேரின் சடலங்கள் இங்கு ஒரு நாளைக்கு அடக்கம் செய்யப்படுகிறது என்று நான் கேட்டேன். 20 முதல் 25 என்று பதில் கூறினார். ஆனால் அந்த நேரத்தில் அங்கு ஜெபம் நடக்கவில்லை. காலைத் தொழுகைக்குப் பிறகு அல்லது மாலைத் தொழுகைக்குப் பிறகு மக்கள் தங்கள் உறவினர்களை அடக்கம் செய்ய வரு கிறார்கள் என்று அவர் கூறினார்.

அங்கு இருந்த ஒருவர், காலையில் தான் தனது தாயார் கோவிட் நோய்க்குப் பலியானதாகக் கூறினார். அவரது சடலத்தைப் பெற, அவரது சகோதரர் மருத்துவமனைக்குச் சென்றிருந்ததாகவும் கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட 12 நாட்களுக்குப் பிறகு தாயார் காலமானார் என்றும் அவர் கூறினார்.

டில்லியில் டசின் கணக்கான மயானங்கள் இருக்கின்றன. நான் சென்றது மூன்றுக்கு மட்டுமே. கோவிட் நோயின் தீவிரம் குறித்த சரியான தகவல் இங்கு தான் கிடைக்கின்றன. கோவிட் காரணமாக ஏற்படும் இறப்புகளை அரசாங்கம் மிகவும் குறைத் துக் காட்டி வருகிறது என்பது இங்கு எரியும் சிதைகளைப் பார்த்தால் புரிகிறது.

- நன்றி: பி.பி.சி.தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தொழில் சட்ட அறிவை தொழிலாளர் பெற வேண்டும்

“நம் நாட்டில் இன ரீதியாக, மொழி ரீதியாக, அரசியல் ரீதியாகப் பிணைக்கப்பட்ட தொழிலாளர்களும், தொழில் சங்கங்களுமேயுள்ளன. தொழில்சங்கங்கள் அரசியல் கட்சிகளின் அடிமைகளாகவே செயற்படுகின்றன. தொழிலாளர் நலனைவிட தாம் சார்ந்த அரசியல் கட்சிகளின், அவற்றின் தலைவர்களின் நலனையே நோக்காகக் கொண்டு இயங்குகின்றன.”

த.மனோகரன்

முக்கிய நிகழ்வுகளை ஆண்டுதோறும் நினைவிலிருத்தி அதன் நோக்கங்களை அடைவதற்காக குறிப்பிட்ட ஒவ்வொரு தினங்கள் பெயரிடப்பட்டு உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவை சமய தினங்கள், சமூக தினங்கள் என்று பல வகைப்படுகின்றன. ஒவ்வொரு சமயத்தவருக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட தினங்கள் முக்கியத்துவம் பெறுவதைப் போன்று சமயம் கடந்த, நாடுகள் கடந்த, இனங்கள் கடந்த பல தினங்களும் நடைமுறையில் காணக்கிடைக்கின்றன.

அவ்வாறான ஒரு தினமாக ஆண்டுதோறும் மே மாதம் முதலாம் திகதி உலகலாவிய ரீதியில் கொண்டாடப்படும் மே தினம் என்ற தொழிலாளர் தினம் அமைகின்றது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர் வர்க்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் பிரதிபலனாக அவர்கள் பெற்றுக்கொண்ட உரிமைகளை உறுதிப்படுத்தி வலுப்படுத்தும் ஒரு நாளாக இந்நாள் அமைகின்றது.

உழைக்கும் உழைப்பாளிகளுக்கும் உயரிடம் கொடுத்து கௌரவித்து போற்றும் பண்பு ஆதிகாலம் முதல் இந்துத் தமிழர்களிடம் இருந்தது. அது இன்றும் தொடர்கின்றது என்பதை தைப்பொங்கள் தினம் பறைசாற்றி நிற்கின்றது. நாம் ஆதிமுதல் அனுஷ்டிக்கும் உழைப்பாளர் தினத்தை சில தசாப்தங்களுக்கு முன் மேலை நாட்டுத் தொழிலாளர்கள் போராடி வென்றனர். அதுவே மேதினம் ‘தொழிலாளர் தினம்’ எனப்படுகின்றது.

இன,மத,மொழி பேதமற்ற முறையில் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபட்டு தமது உரிமைகளை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக குரல் கொடுக்க வேண்டும். முனைய வேண்டும் என்ற உன்னத நோக்கில் அதையே இலட்சியமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் மே தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆனால், இன்று தொழிலாளர் நலனுக்காக, அவர்களது தொழில் உரிமையைப் பேணுவதற்காக வென்று இலட்சிய நோக்கோடு தொழிலாளர் தினமென்று பெயர் குறிப்பிடப்பட்ட இந்நாள் அதன் அடிப்படை நோக்கம் மறக்கப்பட்டு வெளிச்சக்திகளின், குறிப்பாக அரசியல்வாதிகளின் ஆளுகைக்குட்பட்டு அவர்களது நலன் நோக்கிய செயல்பாட்டில் பயணிப்பது தெளிவாகின்றது. உண்மையைக் கூறுவதானால் மேதினம் அதாவது தொழிலாளர் தினத்தின் நோக்கம் தடம் புரண்டுவிட்டது. அதுவே, உண்மை.

நாட்டிலே பல்வேறு தொழில்துறைகள் உள்ளன. அவற்றின் செயல்பாடுகளும் பலவாகும். குறித்த



தொழில்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பேணவும், அவர்களின் முன்னேற்றம் கருதிச் செயல்படவும் அமைக்கப்பட்டவையே அவ்வத்துறைசார் தொழிற்சங்கங்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசுத்துறை, தனியார் துறை, சுயதொழில் துறை என்று பல துறைகள் உள்ளது போன்று மாதச்சம்பளம், நாட்சம்பளம், ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் என்று பல்வேறு வகைப்பட்ட ஊதியம் பெறும் தொழில்களும் உள்ளன. அவற்றுக்கான பிரச்சினைகள், தேவைகள் மாறுபட்டவை.

இவ்வாறுள்ள ஒவ்வொரு துறைக்கும் உரித்தான தொழில்சட்டங்களும் நாட்டில் நடைமுறையிலுள்ளன. அனைத்து தொழிற்சட்டங்களும் நாட்டில் நடைமுறையிலுள்ளன. அனைத்து தொழில்சங்கங்களும் தொழிலாளர் நலன் சார்ந்தவையாகவே உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில் சங்கங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கமென்று இல்லாமல் ஒன்றுக்கு பல தொழில் சங்கங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவாகியுள்ளமையைக் காணலாம்.

நடைமுறையிலுள்ள பதிவு செய்யப்படுள்ள தொழிற் சங்கங்களை நோக்குமிடத்து அவற்றில் பெரும்பாலானவை நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சார்ந்தவையாகவேயுள்ளன.

அரசியல் கட்சிகளுக்கு நிரந்தர வருமானம் ஈட்டித்தரும் துணை அமைப்புக்களாக தொழிற் சங்கங்கள் செயல்படுகின்றனவே அன்றி தமது அங்கத்தவரின் தொழில்சார் நலன்களில் கருத்தூன்றிச் செயல்படுவனவாயில்லை என்பது கசக்கும் உண்மையாகும்.

ஒவ்வொரு தொழில் துறைக்கும் உரித்தான சட்டங்கள் உள்ளன. அவை முறையாகச் செயல்படுத்தப்பட்டு முதலாளி, தொழிலாளி உறவைப் பேணி தொழில் சங்க அமைதியைப் பேண வேண்டும் என்ற நோக்கத்தைவிட, தான்சார்ந்த அரசியல் அமைப்புக்கு எப்படி இலாபம் சேர்க்கலாம் என்று சிந்திக்கும் பல தொழில் சங்க தலைவர்கள் உள்ளனர். இது மறுக்கமுடியாத, மறைக்க முடியாத உண்மை.

துறைசார் தொழில்சங்க சட்டங்கள் பற்றிய அறிவே அற்றவர்கள் தொழில் சங்கங்களில் அங்கம் வகிக்கின்றமையும், குறித்த துறைக்கு எது விதத்திலும் தொடர்பில்லாதவர்கள் தொழில் சங்கம் நடத்துவதும் நம் நாடு கண்டுள்ள விநோதம், சீருடை அணிந்த தாதிகள் அதிலும் பெண் பணியாளர்களைக் கொண்ட சேவைத் தொழில் சங்கமொன்றில் பல தசாப்தங்களாக சமய சீருடையணிந்த பெண்களிடமிருந்து ஒதுங்கியிருக்க வேண்டியவர் தலைமை வகித்து வழிநடத்தும் விநோதம் நம் நாட்டின் தொழில் துறைக்கே உரிய சிறப்பாகும்.

நம் நாட்டில் இன ரீதியாக, மொழி ரீதியாக, அரசியல் ரீதியாகப் பிணைக்கப்பட்ட தொழிலாளர்களும், தொழில் சங்கங்களுமேயுள்ளன. தொழில் சங்கங்கள் அரசியல் கட்சிகளின் அடிமைகளாகவே செயல்படுகின்றன. தொழிலாளர் நலனைவிட தாம் சார்ந்த அரசியல் கட்சிகளின், அவற்றின் தலைவர்களின் நலனையே நோக்காகக் கொண்டு இயங்குகின்றன.

இலங்கையின் தொழில் சங்க வரலாற்றை நோக்கும் போது படிப்படையாக கட்டுக்கோப்பாக இயங்கிய தொழில் சங்கங்கள் பினைப்பட்டு, சிதைந்து, சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளமையைத் தெளிவாக உணர முடிகின்றது.

இந்த நிலையில் மேதினம் என்ற தொழிலாளர் தினம் நம் நாட்டில் கொண்டாடப்படுவது தொழிலாளர் நலன் சார்ந்த, உரிமை சார்ந்த ஒன்றாக அமையாது தமது சக்தியை ஊர்வலங்கள், கூட்டங்கள், கோசங்கள் மூலம் தொழில்துறையுடன் சம்பந்தப்படாத அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகளுக்கு உரம் சேர்ப்பதற்காகவே என்பது புலனாகின்றது.

இன்றைய தொழிலாளர் தினம் சம்பிரதாய நிகழ்வாகவே அமைகின்றது.

ஒவ்வொரு தொழிலாளியும் தான் ஆற்றும் தொழில்துறை சார்ந்த நாட்டில் நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்கள் பற்றிய போதிய அறிவைப் பெற்றுக்கொள்வதுடன், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்சங்கவாதிகளும் தொழிற் சங்கங்கள் தொடர்பில் பூரண அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும். மேதினம் என்பது ஒருநாள் கூத்தாக அமைந்து விடாது தொழிலாளர் பயனடைய வழிகாட்டும் நன்னாளாக அமைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

54

2016 - 07,08,21,22

* ஒரு சிறிய சந்தையில் உள்ள விற்பனைக் கூடங்களின் மாதிரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு 07,08 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறிய சந்தை - 2016

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| உலர் உணவுப் பொருள்கள் | மரக்கறி | பழங்களும் கீரை வகைகளும் | பூக்கன்றுகள் |

07. சீனி, வல்லாரை, வாழைப்பழம் ஆகியவற்றை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய விற்பனைக் கூடங்களின் எண்கள் யாவை?
 1. (1),(2) ஆகியன
 2. (1),(3) ஆகியன
 3. (2),(3) ஆகியன

08. தராசு பயன்படுத்தப்படாத கூடமாக இருக்கத்தக்கது யாது?
 1. (1) 2. (3) 3. (4)

* கீழே தரப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கையை வாசித்து 21, 22 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கண்டி மாவட்டத்தில் உள்ள ஒரே மழைக் காடாகிய மொர எல்லக்காடு ஆனது அனுமதியின்றி மரங்களை வெட்டுதல், பயிர்ச் செய்கைகளுக்காக வெட்டித் துப்பரவாக்கல், சிறிய மின்வலு நிலையங்களை அமைத்தல் போன்ற நிலைமைகளினால் கடும் சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது. மகாவலி கங்கை உட்படப் பல ஆறுகளினால் வளம் பெறும். இக் காட்டில் ஏறத்தாழ 192 தாவர இனங்கள் இனங் காணப்பட்டுள்ள அதேவேளை அவற்றில் ஏறத்தாழ 92 இனங்கள் இலங்கைக்கே உரிய தாவரங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றில் 21 தாவர இனங்கள் இப்போது அழியும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளன.
(2015.11.09 ஆந் திகதி ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையிலிருந்து)

21. மொர எல்லக் காடு இருப்பது இலங்கையின்
 1. மத்திய மாகாணத்தில்
 2. ஊவா மாகாணத்தில்
 3. சப்ரகமுவ மாகாணத்தில்

22. பின்வருவனவற்றில் இச் செய்தித்தாள் அறிக்கைக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு யாது?
 1. மொர எல்லக் காடு பயிர்ச் செய்கைகளுக்காக வெப்பத் துப்புரவாக்கப்படுகிறது.
 2. மொர எல்லக் காடு சுற்றாடற் பாதிப்புக்கு உட்பட்டுள்ளது.
 3. மொர எல்லக் காட்டில் தாவர இனங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# கட்டுப்பாடு விதிக்காமலிருக்க ரூ.5,000 அச்சமே காரணம்!

## அரசு மீது அஷோக அபேசிங்க சாடல்

கொழும்பு,ஏப்.30

**நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள போதிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. மக்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்க வேண்டியேற்படும் என்ற அச்சத்திலேயே அரசாங்கம் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிக்காமலுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க கடுமையாகச் சாடியுள்ளார்.**



கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிப்பதோடு, பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது இலங்கையில் குறைந்தளவான பரிசோதனைகளே முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் பரிசோதனைகளில் நூற்றுக்கு 20 வீதமானோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை கண்டு இலங்கை மக்கள் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறான நிலைமையில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களை தனிமைப்படுத்துவதற்கு இலங்கை முன்வந்துள்ளது. நட்சத்திர ஹோட்டல்களில் இவ்வாறு இந்தியர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், தற்போது மூன்றரை இலட்சம் தடுப்பூசிகள் மாத்திரமே கையிருப்பில் உள்ளன. ஒரு மாதத்தில்இது நிறைவடைந்து விடும். அதன் பின்னர் தடுப்பூசி வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான தயார்படுத்தல் அரசாங்கத்திடமில்லை.

இவ்வாறான நிலையில் மக்களின் வாழ்க்கை செலவு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்க வேண்டியேற்படும் என்ற அச்சத்திலேயே போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமலுள்ளன. எவ்வாறிருப்பினும் கொவிட் கட்டுப்படுத்தலுக்காக பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்- என்றார். (எ)

# தாங்கள் விரும்பும் தடுப்பூசியை மக்கள் தெரிவுசெய்ய முடியாது

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.30



பொதுமக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தெரிவு செய்ய முடியாது என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக அவர்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கை இதுவரை அஸ்ட்ராசெனேகா கொவிஷீல்ட் தடுப்பூசியைப் பயன்படுத்தியது. சீன சினோபார்ம் தடுப்பூசியின் பங்குகள் தற்போது இலங்கையிலுள்ளன. அதனை உள்ளூர்வாசிகள் பயன்படுத்த அனுமதிக்காக காத்திருக்கிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து வாங்கிய ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி விரைவில் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

எவ்வாறிருப்பினும் பொது மக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தேர்வு செய்ய முடியாது- என்றார். (எ)

# இந்திய சுற்றுலாப்பயணிகளுக்கு இலங்கையில் புதிய கட்டுப்பாடு

கொழும்பு,ஏப்.30

இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என இலங்கை சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.

இருப்பினும், விஷேட கட்டுப்பாடுகளுடன் இந்திய சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

டில்லியில்கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் இலங்கைக்கு வருகை தரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே, நாட்டை வந்தடைந்த இந்தியர்கள் ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஏனைய சுற்றுலாப்பயணிகளுடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இருப்பினும் சுகாதார அதிகாரிகள் தீர்மானித்தால் விமான நிலையங்களை மூடுவது அல்லது இலங்கைக்கு வருவதை ஒட்டுமொத்தமாக குறைப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை தேர்தலை நிச்சயம் நடத்த வேண்டும்

## இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதியை நினைவுபடுத்துகிறார் இராதாகிருஷ்ணன்



**கொழும்பு,ஏப்.30**

**மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயார் என்று அரசாங்கம் கூறினாலும், ஆளுங்கட்சிக்குள்ளேயே இதில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எத்தகைய சிக்கல்கள் காணப்பட்டாலும் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். எதிர்க்கட்சி என்ற ரீதியில் தொடர்ச்சியாக இதனை நாம் வலியுறுத்துவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறுகின்ற போதிலும், அதனை எந்த முறைமையில் நடத்துவது என்பது அரசாங்கத்துக்கு பெறும் பிரச்னையாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துக்கு மூன்றில்இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறதா? என்ற சந்தேகம் எழுகிறது.

இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மாகாண சபை விவகாரத்தில் தீர்க்கமானதொரு முடிவை அரசாங்கம்எடுக்க வேண்டும். ஆனால், உண்மையில் தேர்தல் நடத்தப்படுமா? என்று உறுதியாகக்கூற முடியாது.

மாகாணசபைத் தேர்தல் துரிதமாக நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா பல சந்தர்ப்பங்களில் அழுத்தம் பிரயோகித்துள்ளது. ஆனால் கொரோனா நிலைமையைக் காரணம் காட்டி எதையுமே செய்ய முடியாது என்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல், கொரோனா, எண்ணெய் இறக்குமதி, உரம் உள்ளிட்ட சகல விடயங்களிலும் அரசாங்கத்தின் வீழ்ச்சி வெளிப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டமை, ஹரீன்பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை கைது செய்வதற்கு முயற்சிக்கப்படுகின்றமை யாரேனுமொருவரை திருப்திப்படுத்துவதற்கான செயல்பாடுகளா? என்ற சந்தேகம் எழுகிறது. பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படாமல் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டமை தவறு. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கைது செய்யப்படுவது ஜனநாயகத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது. இது பிழையானமுடிவாகும் எதிர்காலத்தில்மீண்டும் இது போன்ற செயல்பாடுகள் முன்னெடுக்கப்படாமலிருக்க ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்- என்றார். (எ)

---

### கொரோனா தொற்று அதிகரிப்பு

# சிகிச்சை வசதிகளை அதிகரிக்க தீர்மானம்



கொழும்பு,ஏப்.30

மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை வசதிகளை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்படின் தெரிவு செய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டல்களை கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களாக மாற்றவும் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ)

---

# ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு; ஜனாதிபதியிடம் கோரிக்கை



கொழும்பு,ஏப்.30

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம்எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்குணகொலபெலஸ்ஸ சிறையில் ரஞ்சன் ராமநாயக்கவை பார்க்கச் சென்றபோது இது தொடர்பில் அவருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும்இ அது தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும்அவர் கூறினார். (எ)

---

# தனிமைப்படுத்தலை மீறிய 187 பேர் கைது

கொழும்பு,ஏப்.30

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 187 பேர் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் இந்த குற்றச்சாட்டுக்காக இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஓட்டோக்கள் தொடர்பில் பொலிஸாரால் நடத்தப்பட்ட சிறப்பு சோதனையில் 1,240 ஓட்டோக்கள் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிச் செயல்பட்டமை கண்டறியப்பட்டது.

மொத்தமாக 6,110 ஓட்டோக்கள் பரிசோதிக்கப்பட்டன.

இவற்றுள் பெரும்பாலானா ஓட்டோக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையையும் விட அதிகளவிலான பயணிகளை ஏற்றிச்செல்வது கண்டறியப்பட்டது எனப் பொலிஸார் கூறினார்.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறும் நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளியாகக் காணப்பட்டால் 6 மாத காலச் சிறை தண்டனை மற்றும் 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதனால், சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளுக்கு அமைய செயல்பட வேண்டும் என்று பொது மக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

கொரோனா அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டிருக்குமாயின் சம்பந்தப்பட்ட பிரதேச மக்கள் அதே பிரதேசத்தில் தங்கியிருக்க வேண்டும். அதேபோன்று வெளி நபர்கள் இந்தப் பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதற்குத் தடை என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

---

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆவணங்களை கையளியுங்கள்

## குற்றப்புலனாய்வு பணிப்பாளர் கோரிக்கை

கொழும்பு,ஏப்.30

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணைகள் அடங்கிய அறிக்கை கிடைக்கப்பெற்றிருந்தால் அதனை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில்: உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட இரகசிய விசாரணைகள்அடங்கிய அறிக்கையை, கத்தோலிக்க அருட்தையர்களிடம் சிலர் கையளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கொழும்பில் அமைந்துள்ள தேவாலயமொன்றில் கடந்த திங்கள்கிழமை அந்த அறிக்கை கையளிக்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறு ஏதேனும் அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தால், அது விசாரணைக்கு மிகவும்பயனுடையதாக அமையும்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், இதுவரையில் 703 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், இன்னும் சிலர் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அருட்தந்தையர்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கை கிடைக்கப் பெற்றால், அது விசாரணை அதிகாரிகளின் செயல்பாடுகளுக்கு மேலும் பயனுடையதாக அமையும். தாக்குதல் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ள சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கை விசாரணை அதிகாரிகளுக்கே கிடைக்கப்பெற வேண்டும். அதனால் கொழும்பு -10 இல் அமைந்துள்ள சமூகம், மத கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அந்த அறிக்கையை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கையளிக்க வேண்டும் என அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)

---

# சமூக பொருளாதார இலக்குகளை கட்டியெழுப்பும் திட்டம் அறிமுகம்

கொழும்பு,ஏப்.30

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான சௌபாக்கிய தொலைநோக்கு வேலைத் திட்டத்தின் நிலையான சூழல் பாதுகாப்பு கொள்கை தொடர் பில் வழங்கப்பட்ட உறுதி மொழிகளை நாம் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

அத்தோடு அவற்றை நிறைவேற்றுவதைப் பொறுப்பாக கருதுவதாக அமைச்சரவை பேச்சாளர், வெகுஜன ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தி ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற பேண்தகு அபிவிருத்தி தொடர்பான ஊடகக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பசுமைச் சமூக பொருளாதார இலக்குகளைக் கட்டியெழுப்பும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் தற்போது எதிர்கொண்டிருக்கும் காலநிலை மாற்றத்தை வெற்றி கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இத்திட்டம் அமையவுள்ளது. இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது. பல நாடுகள் சூழல் நேயமிக்க பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் சந்தர்ப்பத்தில், இலங்கையும் அந்த நோக்கில் இணைய வேண்டும் என ஜனாதிபதி யோசனையை முன்வைத்தபோது சுட்டிக் காட்டியதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

---

# குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

அம்பாறை,ஏப்.30

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மத்திய முகாம் - 04 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசித்து வந்த பொன்னையா ரசிகரன் (வயது- 29) எனும் குடும்பஸ்தர், நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு வருகை தந்த பொலிஸார், குடும்ப உறவினர்களிடம் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு மேற்படி குடும்பஸ்தரை அழைத்து வந்த நபரொருவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவரது மரணம், தற்கொலையா? அல்லது கொலையா? என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை மத்திய முகாம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். நாளாந்த கூலி வேலை மற்றும் மீன் வியாபார தொழிலில் ஈடுபட்டு வந்த குடும்பஸ்தரே உயிரிழந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3645 பேர் இந்தியாவில் பலி

புதுடில்லி, ஏப். 30

இந்தியாவில் கொரோனா தொற்றுநோயால் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில், 3 இலட்சத்து 79 ஆயிரத்து 257 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதே காலப்பகுதியில், 3,645 பேர் உயிரிழந்தனர்.

எட்டாவது நாளாகவும் 3 இலட்சத்துக்கும் அதிகமான தொற்று நோயாளர்கள் பதிவான நிலையில் இந்தியாவில் மொத்த கொரோனா பாதிப்பு ஒரு கோடியே 83 இலட்சத்து 76 ஆயிரத்து 524-ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 4 ஆயிரத்து 832-ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, மொத்தமாக இந்தியாவில் இதுவரை 15 கோடியே 20 ஆயிரத்து 648 பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் இந்திய மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)




# தனிப்பட்ட வதிவிடத்தை மெருகூட்ட முறைகேடாக நிதி உதவி பெற்றாரா?

## புதிய சிக்கலில் பொறிஸ் ஜோன்சன்

லண்டன், ஏப். 30

பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தனது தனிப்பட்ட சொகுசு மாடிக் குடியிருப்பை மெருகூட்டுவதற்காக முறைகேடாக நிதி நன்கொடை பெற்றாரா? - இவ்வாறு ஒரு புதிய சிக்கலில் பிரதமர் மாட்டிக் கொண்டுள்ளார் என்ற தகவலை இங்கிலாந்து ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

“11 டவுனிங் வீதி” முகவரியில் பிரிட்டிஷ் பிரதமரின் தனிப்பட்ட சொகுசு வதிவிடம் அமைந்துள்ளது. நாட்டில் முதல் தரமான அந்த வதிவிடத்திலேயே பொறிஸ் ஜோன்சன் தனது துணைவியாருடன் வசித்து வருகிறார். அதனைப் புதுப்பித்து மெருகூட்டும் வேலைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட பராமரிப்பு செலவுத் தொகையை விடப் பலமடங்கு நிதியை பிரதமர் பயன்படுத்தி உள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதற்கான ஆதாரங்களை அரச செலவுகளைக் கண்காணிக்கும் குழு ஒன்று கண்டறிந்துள்ளது.

வதிவிட ஆடம்பர மெருகூட்டலுக்காக மொத்தம் 2 இலட்சத்துக்கும் அதிகமான பவுண்ஸ் செலவு செய்யப்பட்டமைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது. ஆனால், நான்கு படுக்கை அறைகள் கொண்ட அந்த மாடிக் குடியிருப்பைத் திருத்தவோ, தளபாடங்களை வாங்கவோ ஆண்டுதோறும் பிரதமருக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி 30 ஆயிரம் பவுண்ஸ் மட்டுமே.

எஞ்சிய செலவுத் தொகையைப் பிரதமர் எங்கிருந்து, எவ்வாறு பெற்றுக் கொண் டார்? அது கணக்குக் காட்டப்படாத இரகசிய நிதிஅன்பளிப்பா? இவ்வாறான கேள்விகள் அரசியல் தரப்புகளில் கிளப்பப்பட்டு அவை பிரதமர் மீது கடும் அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளன.

“இந்த விவகாரத்தில் குற்ற முறைகேடு அல்லது முறைகேடுகள் இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன” என்று நிதி மோசடிகளைக் கண்காணிக்கும் குழு ஒன்று தெரிவித்துள்ளது. பூர்வாங்க விசாரணைகளையும் அது தொடக்கி உள்ளது.

பிரதமர் தனது தனிப்பட்ட நிதியில் இருந்தே செலவுக்கான பணத்தைப் பயன்படுத்தினார் என்று அவரது அரசுப் பிரமுகர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். பிரதமரும் அதே கருத்தையே வெளியிட்டிருக்கிறார். (ஐ)

# விண்வெளியில் தனி ஆய்வு மையம்: ஏவூர்தி தொகுதியை ஏவியது சீனா!

## 2022 இல் சீன நிலையம் மட்டுமே இயங்கும்!

பீஜிங், ஏப். 30

புதிய விண்வெளி நிலையத்தை அமைப்பதற்கான தொகுதியை சீனா விண்ணுக்கு ஏவியுள்ளது. ஏவியுள்ளது. இது சீனாவின் விண்வெளி இலட்சியத் திட்டத்தின் அண்மைய செயல்பாடாக இது கருதப்படுகின்றது. வென்சாங் விண்வெளி ஏவு தளத்திலிருந்து “மார்ச் - 5 பி” ஏவூர்தி (றொக்கெட்) மூலம் ஏவப்பட்டது.



சீனா விண்வெளியில் அமைக்க ஆரம்பித்துள்ள ஆய்வு நிலையம் 2022ஆம் ஆண்டுக்குள் புதிய நிலையம் செயல்படும் என்று சீனா நம்புகிறது. அனுப்பப்பட்ட தியான் கொங் 1, தியான்கொங் 2 தொகுதிகிளில் விண்வெளி வீரர்களுக்கான வசிப்பிடங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது சுற்றுப்பாதையில் உள்ள ஒரே ஒரு சர்வதேச விண்வெளி நிலையம் உள்ளது. அதிலிருந்து சீனா விலத்தப்பட்டுள்ளது.

விண்வெளி ஆய்வை சீனா மிகவும் தாமதமாகவே தொடங்கியது. சோவியத் ரஷ்யா மற்றும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, சீனா விண்வெளி வீரரை சுற்றுப்பாதையில் அனுப்பியது 2003இல்தான்.

சீனா முன்னர் இரண்டு விண்வெளி நிலையங்களை சுற்றுப் பாதையில் அனுப்பியுள்ளது. தியாங்கொங் -1 மற்றும் தியாங்கொங் -2 ஆகியவை சோதனை நிலையங்களாகள உள்ளன. விண்வெளி வீரர்களால் ஒப்பீட்டளவில் குறுகிய காலம் மட்டுமே அனுமதிக்கும் ஒற்றை தொகுதிகள் அவை.

புதிதாக உருவாகும் விண்வெளி நிலையம் 66 தொன் எடை கொண்டது. பல தொகுதிகளைக் கொண்ட விண்வெளி நிலையம் 10 ஆண்டுகளுக்கு இயக்கப்படவுள்ளது.

அனுப்பட்ட தியான்கொங்கின் முக்கியகூறு 16.6 மீ. நீளமும் 4.2 மீ. அகலமும் கொண்டது. விண்வெளியில் வீரர்கள் வாழ்வதற்கான அனைத்து வசதிகளையும் தொழில்நுட்பங்களையும் கொண்ட தங்குமிடங்களைக் கொண்டது.

ஜூன் மாதத்தில் ஷென்ஜோ -12 முதலாவது விண்பெட்டகம் (Space capsule) செல்லவுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் புதிய விண்வெளி நிலையம் 340 முதல் 450 கி.மீ. (210-280 மைல்) உயரத்தில் பூமியை சுற்றி வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தியாங்கொங் என்று அழைக்கப்படும் இந்த விண்வெளி நிலையம் அடுத்த ஆண்டு இயங்க ஆரம்பிக்கும்போது, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தின் கால்வாசி அளவே இருக்கும். எனினும், அச்சமயம் எந்த நாட்டின் விண்வெளி ஆய் வகமும் பூமியின் சுற்றுப் பாதையில் இருக்காது. இதனிடையே செவ்வாய் கிரகத்திற்கான பயணம், ரஷ்யாவுடன் சந்திரனுக்கான நிலையம் ஒன்றை அமைத்தல் குறித்த திட்டமும் சீனாவிடம் உள்ளது.

சீனாவுடனான பனிப்போர் விண்வெளி பந்தயத்துடனான ஒப்பீடாகவும் கருதப்படுகின்றது. விண்வெளியை இராணுவ மயமாக்கல் மற்றும் முக்கிய திட்டங்கள் புதிய வல்லரசுகளுக்கான புதிய அளவுகோல்களாக மதிக்கப்படுவதால் இத்தகைய திட்டங்களுக்கு பெருந்தொகை செலவிடப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ரூ.187 கோடி சம்பளம் பெற்ற பிரகாஷ் ஷா துறவியானார்!

புதுடில்லி, ஏப். 30

இந்தியாவில் ஆண்டுக்கு 75 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 187 கோடி ரூபாய் சம்பளம் பெற்ற மூத்த அதிகாரி ஒருவர் அனைத்தையும் துறந்து துறவியாகியுள்ளார்.

பிரகாஷ் ஷா இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரரும், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் தலைவருமான முகேஷ் அம்பானியின் வலதுகரமாகத் திகழ்ந்தவர்.

இவர் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் திட்டப் பிரிவு துணைத் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு கொரோனா பாதிப்பு ஏற்பட்ட உடனேயே ஆடம்பர வாழ்க்கையைத் துறந்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி வெள்ளை ஆடை உடுத்தி துறவிக்கான தீட்சையை பெற்றவரின் மனைவியான நைனா ஷாவும் துறவறம் பூண்டுள்ளார்.

ஓய்வுபெறும்போது இவரது ஆண்டு சம்பளம் 75 கோடி ரூபாயாக இருந்துள்ளது.

கெமிக்கல் இன்ஜினீயரிங்கில் பி.ரெக் மற்றும் எம்.ரெக் பட்டம் பெற்றவர். மும்பையில் ஐ.ஐ.டி. பட்டம் பெற்றுள்ளார்.

இவரின் இளையமகன் 7 ஆண்டுகளுக்கு முன்பே தனது 24 ஆவது வயதில் துறவியானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்காவால் இந்தியாவுக்கு

# 1950 கோடி ரூபாய் பெறுமதியான மருத்துவ பொருட்கள் அன்பளிப்பு

வாஷிங்டன், ஏப். 30

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவுக்கு உதவும் வகையில் சுமார் 10 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் 1,950 கோடி ரூபாய் பெறுமதியான மருத்துவ உதவி பொருட்களை அமெரிக்க அனுப்பியுள்ளது.

இந்த உதவிப் பொருட்களில் 1,000 ஒட்சிசன் சிலிண்டர்கள், ஒன்றரை கோடி என் .95 முகக்கவசங்கள், 10 இலட்சம் துரிதமாக கொவிட்19 தொற்று நோயைக் கண்டறியும் அன்ரிஜென் பரிசோதனை கருவிகள் உள்ளன.

அத்துடன், அஸ்ட்ராஸெனெகா தடுப்பூசி உற்பத்திக்கான மூலப் பொருட்களையும் இந்தியாவிற்கு அமெரிக்க அனுப்பியுள்ளது. இது 2 கோடி கொவிட் -19 தடுப்பூசிகளைத் தயாரிக்க போதுமானதாகும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாணம் - கொழும்பு உட்பட

# தொலைதூர நகரங்களுக்கான ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப்.30

**அதிகரித்துவரும் கொரோனா தொற்று பரவல் காரணமாக தொலைதூர மற்றும் நகரப் புறங்களுக் கான ரயில் சேவைகள் நாளை முதலாம் திகதி தொடக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றன என்று இலங்கை புகையிரதத் திணைக்களம் அறி வித்துள்ளது.**

நாளை தொடக்கம் மூன் றாம் திகதி வரை இந்த ரயில் சேவைகள் கட்டம் கட்டமாக இடைநிறுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டையிலி ருந்து பதுளை, கண்டி, காங் கேசன்துறை, பொலநறுவை, பெலியத்தை ஆகிய பகுதிக ளுக்கு முன்னெடுக்கப்படும் ரயில் சேவைகள் இடைநிறுத் தப்படுகின்றன. இதேவேளை கண்டி, காங்கேசன்துறை, பொலநறுவை, பெலியத்தை மற்றும் பதுளை ஆகிய பகுதி களிலிருந்து கொழும்பு கோட் டைக்கான தொடருந்து சேவை களும் நாளை தொடக்கம் இரத்து செய்யப்படவுள்ளதா கவும் ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)



# முத்தையன்கட்டில் தீ விபத்து: மூன்று கடைகள் முற்றாக நாசம்!

முல்லைத்தீவு, ஏப். 30

முத்தையன்கட்டு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற தீ விபத் தில் 3 கடைகள் முற்றாக எரிந்தன.

முல்லைத்தீவு - முத்தையன்கட்டு - இடதுகரை பகுதியிலுள்ள பலசரக்கு கடை, இரும்பு, விடுகட்டும் உபரகணங்கள் விற்பனை செய்யும் கடை உட்பட மூன்று கடைகளே இவ்வாறு தீ விபத்தால் எரிந்தன.

மின் ஒழுக்கு காரணமாகவே இந்தத் தீ விபத்து நிகழ்ந்துள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறான தீ விபத்து அனர்த்தங் கள் இடம்பெற்றால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தீயணைப்பு வாகன வசதிகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தொற்று 3ஆம் அலை அச்சுறுத்தல்:

# பள்ளிவாசல்களுக்கு முக்கிய விதிமுறைகள்!

கொழும்பு, ஏப். 30

நாட்டில் கொரோனா 3ஆவது அலை அச்சுறுத்தல் அதிகரித் துள்ள நிலையில் பள்ளிவாசல் நிர்வாகங்களுக்கு முக்கிய அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றை கட் டுப்படுத்துவதற்காக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக் கள பணிப்பாளர் ஏ. பி. எம். அஷ்ரபினால் பள்ளிவாசல்கள் நிர்வாக சபையினருக்கு விசேட அறிக்கை ஒன்று வெளியிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், சகல பள்ளிவாயல்களிலும் தராவீஹ், ஜூம்ஆத் தொழுகை மற்றும் பயான்கள், கியாமுல்லைல், இதி காப், தவ்பா போன்ற அனைத்து கூட்டுச் செயல்பாடுகளையும் மறு அறிவித்தல் வரை தற்காலி கமாக இடைநிறுத்தல்.

எந்தவொரு பள்ளிவாசலி லும் ஒரே நேரத்தில் அதிகூடி யது 25 பேர் என்ற உச்ச வரம் பிற்குட்பட்டு ஐவேளை ஜமாஅத் தொழுகைக்கு அனுமதி வழங் கல், முகக்கவசம் அணிதல், ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணல், தொழுகை விரிப்பை கொண்டு வருதல், வீட்டிலி ருந்து வுழு செய்து கொண்டு வருதல் ஆகிய கட்டாயமாகும்.

வுழு செய்யும் பகுதியை மூடிவைத்தல், தனிமைப்படுத் தப்பட்ட அல்லது வரையறுக்கப் பட்ட சகல பகுதிகளிலும் அனைத்து பள்ளிவாசல்களும் மறு அறிவித்தல் வரை மூடப் பட்டிருத்தல் வேண்டும், சுகா தார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளால் வெளியிடப் பட்டுள்ள ஏனைய அனைத்து வழிகாட்டல்களும் வக்பு சபை யின் முன்னைய பணிப்புரை களும் மிகக் கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.

மேலுள்ள வழிகாட்டல் களை பின்பற்றுவது நடை முறைச் சாத்தியமற்றது அல்லது சிரமம் எனில் பள்ளிவாசல் களை மூடுவதற்கு நம்பிக்கைக் குரியவர்களுக்கு / பொறுப் பாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# திருகோணமலையில் பல பகுதிகள் முடக்கம்!

திருகோணமலை, ஏப். 30

திருகோணமலையில் சில தினங்களாக கொவிட் தொற் றாளர்கள் பலர் இனங்காணப் பட்டமையை தொடர்ந்து சில கிராம உத்தியோகத்தர் பிரி வுகள் நேற்று காலை 7 மணி தொடக்கம் தனிமைப்படுத்தப் பட்டன என்று அரசாங்க அதி பர் சமன் தர்சன பாண்டி கோராளை தெரிவித்தார்.

நேற்று மாவட்ட செயல கத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனன்குடா, காவட்டிக் குடா, லிங்கன் நகர், கோயிலடி, சுமேதங்கரபுர, மட்கோ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரி வுகள் நேற்று முதல் மறுஅறி வித்தல் வரை தனிமைப்படுத் தப்பட்டன.

இதேவேளை, தனிமைப்ப டுத்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு அரசாங்கத் தினால் வழங்கப்படும் உலர் உணவு மற்றும் கொடுப்பன வுகள் காலக்கிரமத்தில் வழங் கப்படவுள்ளன. இதற்கு மேல திகமாக அரசசார்பற்ற நிறுவ னங்களின் ஒத்துழைப்புடன் உலர் உணவுகளும் விரைவில் வழங்கப்படும் - என்றார்.

நேற்று முன்தினம் மாத்திரம் மாவட்டத்தில்முகக்கவசம்இன்றி நடமாடிய 60 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மக்கள் வங்கியின் 22 கிளைகள் பூட்டு

கொழும்பு, ஏப். 30

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவிவரும் நிலையில் மக்கள் வங்கியின் 22 கிளைகள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. மக்கள் வங்கி அதன் முகநூல் பக்கத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை மாவட் டத்தில் கெப்பெட்டிபொல கிளை, கொழும்பு மாவட்டத் தில் கட்டுபெத்த கிளை, சொயி சாபுர மற்றும் நாவல கிளை, கம்பஹா மாவட்டத்தில் கொடதெனிய கிளை, கண்டி மாவட்டத்தில் பிலிமத்த லாவை, ஹதரலியெத்த கிளை, கேகாலை மாவட்டத்தில் ரம் புக்கனை கிளை, குருநாகல் மாவட்டத்தில் நாரம்மல கிளை, மாகதுர கிளை, கொபெயிகனே கிளை, பிங்கிரிய கிளை, நிக்கவ ரெட்டிய கிளை, கட்டுப்பெத்த கிளை, பொரளுவெவ கிளை மற் றும் பன்னல கிளை, மாத்தறை மாவட்டத்தில் கந்தர கிளை, திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் கிளை மற்றும் மொல் லிபொத்தானை கிளை என்பன இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

# இந்திய மீனவர்களுடன் தொடர்பை பேணாதீர்!

### வடக்கு மீனவர்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

கொரோனா தொற்றின் வேகம் அதிகரித்து வருவதால், சர்வ தேச கடல்பரப்பில் இந்திய மீன வர்களுடன் தொடர்புகளைப் பேணுவதைத் தவிர்த்துகொள் ளுமாறு மீன்பிடித் திணைக் களம், வடக்கு மீனவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய இந்திய மீன வர்களுடன் கொடுக்கல் வாங் கல்கள் மற்றும் பொருள்கள் பரிமாறுதல் போன்ற எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாமென்றும் மீன்பிடி திணைக்களத்தின் நடவடிக் கைப் பணிப்பாளர் கல்யாணி ஹேவாபத்திரண கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவிலிருந்து மஞ்சள் மற்றும் சட்டவிரோத பொருள் களைக் கொண்டு வருவதை தவிர்க்குமாறும் அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (அ)

# சிங்கள மக்களை திசை திருப்பும் உத்தியே புர்காவுக்கான தடையும்

### முஜிபுர் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 30

அரசாங்கம் சீன பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரையாடி யுள்ள இரகசிய விடயங்களை மறைப்பதற்காக பல்வேறு தந் திரங்களை கையாண்டு வருகின் றது. அதனடிப்படையிலேயே புர்கா அணிவதை தடை செய் யும் விடயத்தை அரசாங்கம் மீண்டும் பூதாகரமாக்கி சிங்கள மக்களை திசை திருப்ப நடவ டிக்கை எடுத்திருக்கின்றது என கொழும்பு மாவட்ட ஐக்கிய மக் கள் சக்தி பாராளுமன்ற உறுப்பி னர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், கொவிட் பரவல் தீவிரமடைந் துள்ளது. இந்நிலையில் முகத்தை மூடுதல் அல்லது நோய் தொற் றிலிருந்து பாதுகாத்துக் கொள் வதற்கு உடம்பை மறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இந்நிலையில், அனைவரும் முகக் கவசம் அணிய கட்டாயப் படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் முகக் கவசம் அணியாத நூற்றுக் கணக் கானோர் கடந்த சில நாட்களாக கைது செய்யப்பட்டிருக்கின் றனர். இவ்வாறான நிலையில் முகத்தை மூடும் நிகாப் மற்றும் புர்கா விடயத்தை பேசுபொரு ளாக மாற்றுவதற்கே அதனை தடை செய்வதற்கான அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டிருக் கிறது.

அரசாங்கத்தின் இந்த நட வடிக்கை அப்பாவி சிங்கள மக் களை திசை திருப்புவதற்கான செயல்பாடாகும்.

கடந்த காலங்களிலும் ஒவ் வொரு பிரச்னைகள் வரும்போது முஸ்லிம்களுடைய விவகாரங் களை பூதாகரமாக்கிக் கொண் டிருக்கிறது. மத்ரஸா விடயத்தை கையில் எடுத்தனர், மாட்டிறைச்சி விவகாரத்தை பூதாகரமாக்கி னர். இதற்கப்பால் அசாத் சாலி, ரிஷாட் பதியுதீன், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், அஹ்னாப் என்று பலரையும் கைது செய்து சிங் கள மக்களை ஏமாற்றிக்கொண் டிருக்கின்றனர்.

அந்த வகையில் தற்போது சீன பாதுகாப்பு அமைச்சர் நாட் டுக்கு வந்திருந்தார். அவருடன் அரசாங்கம் பல்வேறு இரகசிய கலந்துரையாடல்களை மேற் கொண்டிருக்கவேண்டும். அந்த விடயங்கள் வெளியில் வருவதை தடுக்கும் நோக்கிலே முகத்தை மறைப்பதற்கு தடை விதிக்கும் செய்தியை வெளியிட்டிருக் கின்றது.எனவே அரசாங்கத்தின் இந்த முட்டாள் தனமான ஜன நாயக விரோத செயல்பாடுகளுக்கு அரசாங்கம் விரைவில் தண்ட னையை பெற்றுக்கொள்வார் கள் என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுதானிய பயிர்ச்செய்கை அறுவடை

தளங்களப்பு,ஏப்.30

'வேள்ட் விஷன்' நிறுவனத் தின் அனுசரணையுடன் தனங் களப்பு கிராமத்தில் நெல் அறு வடையின் பின்னராக சிறுதா னிய பயிர்ச்செய்கை இடம் பெற்று அறுவடை விழா நேற் றுக் காலை இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச செய லர், வேள்ட் விஷன் நிறுவனத் தின் முகாமையாளர், கைதடி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தி யோகத்தர், சமுர்த்தி உத்தி யோகத்தர் மற்றும் விவசாயிகள் எனப்பலர் இதில் கலந்து கொண்டனர். நெற் செய்கை யின் பின்னராக அனைத்து விவசாயிகளையும் சிறுதானிய பயிர்ச்செய்கையில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டு அதன் பலனை விவசாயி கள் பெறும் வகையில் ஒரு விழாவாக தனங்களப்பு கமக் கார அமைப்பு இதனை முன் னெடுத்திருந்தது. (எ)

# அவசர நிலை ஏற்பட்டால் எதிர்கொள்வதற்கு தயார்

## யாழ்.அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30



**கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து, அவசரகாலநிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள் வதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளோம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்டத் தில் இதுவரை 1,544 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். நேற்று முன்தினம் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதுவரை 19 உயிரிழப்புக் கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாண மாவட்ட நிலை மையை ஆராய்ந்து ஒரு சில நடவடிக்கைகளை முன்னெ டுத்திருந்தோம்.

இதற்கு மேலதிகமாக ஆளுநர் தலைமையில் விஷேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதனடிப்படையில் தேசிய ரீதியில் மற்றும் கொரோனா தடுப்புச் செயலணியின் விதிமுறைகளுக்கு அமைய தற்போதுள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு வடக்கு மாகாணத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர் பில் ஆராயப்பட்டது.

அதேபோன்று யாழ். மாவட்ட நிலைமை தொடர் பிலும் ஆராயப்பட்டது.

சுகாதார வழிமுறைகளை அமுல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள், பிரச்சனைகள் விழிப்புணர்வு நடவடிக்கை களை முறையாக அமுல்படுத் தல். அதனைப் பின்பற்றாத நிலைமை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக கடல்கடந்து மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடி யாளர்கள் சிலவேளைகளில் ஏனைய நாட்டு மீனவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றமை அவ தானிக்கப்பட்டது. இது தொடர்பில் கைதுகளும் இடம் பெற்றன.

அதாவது சட்டவிரோத கடல் பயணங்கள், சட்ட விரோத தொடர்பாடல்களை தடுக்கும் வகையில் விழிப்பு ணர்வு நடவடிக்கைகள் மீனவ மக்களுக்கும், அத்தோடு கரை யோரப் பகுதி மக்களுக்கும் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆராயப்பட்டது.

தனிமைப்படுத்தல் நிலை யங்கள் தொடர்பில் ஆராயப் பட்டதோடு தனிமைப்படுத்தல் நிலையங்களை தேவைக்கேற்ப அதிகரிப்பதற்குரிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட் டது- என்றார். (எ-03)

# சாரா இந்தியா சென்றிருக்க ஒருபோதும் வாய்ப்பில்லை

## அமைச்சர் சரத் வீரசேகர



கொழும்பு,ஏப்.30

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மேற்கொண்ட ஒரு வரின் மனைவி எனக் கருதப் படும் சாரா (புலஸ்தினி ராஜேந் திரன்) இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருப்பதற்கான வாய்ப் பில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீர சேகர தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதில் குண்டுவெடிப்பு இடம்பெற்று இரண்டு வருடங்களாகியுள்ள போதிலும் சாராவுக்கு என்ன நடந்தது? என்பது மர்மமாகவே உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

நாங்கள் திட்டமிட்டுள்ள இரண்டாவது மரபணு பரி சோதனை மிகவும் கடின மானது எனத் தெரிவித்த அமைச்சர், சாரா இறந்துவிட் டாரா? அல்லது இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளாரா? என் பதை உறுதிசெய்வதற்காக புதைக்கப்பட்டுள்ள பெருமளவு உடல்பாகங்களை மரபணு பரி சோதனைக்கு உட்படுத்த வேண்டியிருக்கும் எனவும் தெரி வித்தார்.

நிஷார் என்ற சாட்சியொரு வர் புலஸ்தினி என்ற தமிழ்ப் பெண் இஸ்லாமிய மதத்துக்கு மாறி கடுவாப்பிட்டி தற் கொலைக் குண்டுதாரி ஹஸ்துன் என்பவரை திருமணம் செய் தார். அவர் இந்தியாவுக்கு தப் பிச்சென்று விட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆனால், இதுவரையில் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வர் சாரா தப்பிச்செல்வதற்கு உதவியதை தான் பார்த்தார் என நிஷார் தெரிவித்தார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ)

# 'என்-ஜோய்' தேங்காய் எண்ணெயிலும் புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம்

கொழும்பு,ஏப்.30

'என்-ஜோய்' என்ற பெயரில் விற்பனையாகும் தேங்காய் எண்ணெய் பங்குகளை சந்தை யிலிருந்து திரும்பப்பெறுவதாக நுகர்வோர் விவகார சபை அறி வித்துள்ளது.

என்-ஜோய் தயாரிப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் புற்றுநோயை ஏற்படுத்தும் அஃப்லாடாக்சின் உள்ளமை கண்டறியப்பட்ட தாக நுகர்வோர் விவகார சபை யின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும் உள்ளூர் கொப் பராவைப் பயன்படுத்தி என் - ஜோய் தேங்காய் எண்ணெய் தயா ரிக்கப்பட்டது என நுகர்வோர் விவகார சபையின் சிரேஷ் அதிகாரி ஒருவர் கூறினார்.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் அறிவுறுத்த லின்படி, சந்தையிலுள்ள அனைத்து தேங்காய் எண்ணெ யிலும் நச்சுத்தன்மை உள்ளது என்பது குறித்து நுகர்வோர் விவகார சபை விசாரணை களை மேற்கொண்டு வருகி றது.

இதன்படி, பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய் வகங்களில் என்-ஜோய் தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் தேங்காய் எண்ணெய் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

தொழில்துறை தொழில் நுட்ப நிறுவனத்தில் மேற் கொள்ளப்பட்ட இரண்டாவது சோதனையிலும் அந்த எண் ணெயில் அஃப்லாடாக்சின் உள்ளமை உறுதி செய்யப்பட் டது.

இதனைத்தொடர்ந்து, தேங் காய் எண்ணெயை சந்தையி லிருந்து அகற்ற நுகர்வோர் விவ கார சபை முடிவு செய்துள்ளது.

அதேநேரம், கிராண்ட்பாஸி லுள்ள என்-ஜாயின் எண்ணெய் களஞ்சியசாலைக்கு நுகர்வோர் விவகார சபை அதிகாரிகள் 'சீல்' வைத்தனர். (எ)

## கொரோனா தொற்று வேகமாக அதிகரிப்பு

# எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள அரசு தயார் நிலையில் இருக்க வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்து

கொழும்பு,ஏப்.30

நாடு கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் சூழ் நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் அதற்கான சிகிச்சை நிலையங்கள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள், கட்டில்கள், தேவை யான ஒட்சிசன் ஆகியவை தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என அரசாங்க மருத் துவ அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அச்சுறுத்தலான காலகட்டத்தில் நாடு உள்ளதா கவும், வைரஸ் தொற்று நோயா ளிகள் அதிகரிப்பதை கட்டுப் படுத்துவதற்கு விரைவான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென் றும் அந்த சங்கம் அறிவுறுத்தி யுள்ளது.

நாடு பூராகவும் வைரஸ் தொற்று நோயாளர்கள் பெரு மளவில் இனங்காணப்பட்டு வரும் நிலையில் அரசாங்கம் நிலைமைகளை எதிர்கொள்ளக் கூடிய தயார் நிலையை ஏற் படுத்திக்கொள்ள வேண்டும் என மேற்படி சங்கத்தின் செய லாளர் மருத்துவர் செனால் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

மருத்துவத்துறை சுமக்க முடியாத அளவில் நோயாளர் களின் அதிகரிப்பு ஏற்படுமா னால் சுகாதாரத்துறை உத்தி யோகத்தர்களுக்கு அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம்.

அதனைக் கருத்தில் கொண்டு போதியளவு சிகிச்சை நிலையங்களில் கொள்ளளவை அதிகரித்துக்கொள்ளல், தீவிர சிகிச்சைப் பிரிவில் வசதிகள் மற் றும் கட்டில்களின் எண்ணிக் கையை அதிகரித்தல் மற்றும் தேவையான அளவு ஒட்சிசனை களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப் பட்ட பாதுகாப்பு தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## எழுமாறாக மேற்கொண்ட

# 45 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 26 பேருக்கு கொரோனா உறுதி

ஹற்றன்,ஏப்.30



நுவரெலியா, அம்பகமுவ சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தால் கினிகத்ஹேன பகுதியில் எழுமாறாக மேற்கொண்ட 45 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 26 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்தத் தொற்றாளர்கள் கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் சேவையாற்றிவிட்டு தங்களது வீடுகளுக்குத் திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 24 ஆம் திகதி குறித்த பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பிரித்வி ஷா அதிரடி: டில்லி அபார வெற்றி!

அஹமதாபாத், ஏப். 30

பிரித்வி ஷாவின் அதிரடி அரைச் சதம் கை கொடுக்க கொல்கத்தா அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் 25ஆவது போட்டி நேற்றிரவு நடந்தது. அஹமதாபாத்தில் நடந்த இந்தப் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ரிஷப் பந்த் முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தார்.

இதனால், கொல்கத்தா முதலில் ஆடியது. தொடக்கம் கொடுத்த ராணா ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸர் அடித்து 15 ஓட்டங்களுடன் வெளியேறினார். ஷுப்மன் கில்லுடன் அடுத்து இணைந்த திரிபாதி 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் இயன் மோர்கன், சுனில் நரைன் ஆகியோர் ஓட்டம் எதையும் எடுக்காமலே ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த அந்தி ரஸல் பிறந்தநாளிலும் தனது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில், 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்கள் எடுத்த ஷுப்மன் கில் 43 ஓட்டங்களுடன் வெளியேற அடுத்து வந்த தினேஷ் கார்த்திக் 14 ஓட்டங்களே எடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 154 ஓட்டங்களை எடுத்தது.

டில்லியின் பந்துவீச்சில் லலித் யாதவ், அக்ஸர் பட்டேல் தலா 2 விக்கெட்களையும், ஆவேஸ் கான், ஸ்ரொய்னிஸ் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

155 என்ற இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடியது டில்லி அணி. பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. அதிரடியாக ஆடிய



இந்த இணை 132 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது.

நிதானமாக ஆடிய தவான் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 47 பந்துகளில் 46 ஓட்டங்களை எடுத்தார். ஆனால், மறுமுனையில் அதிரடி காட்டிய பிரித்வி ஷா 41 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 82 ஓட்டங்களை குவித்து கம்மின்ஸின் பந்தில் ராணாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் 16.3 ஓவர்களில் டில்லி அணி 3 விக்கெட்கள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. கொல்கத்தாவின் பந்துவீச்சில் பட் கம்மின்ஸ் 3 விக்கெட்களையும் கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக பிரித்வி ஷா தெரிவானார். (ஐ)



# லஹிரு, திமுத் சதம்: இலங்கை 291/1

கண்டி, ஏப். 30

திமுத் கருணாரத்ன, லஹிரு திரிமன்னே ஆகியோர் சதம் அடித்து அசத்த இரண்டாவது டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தில் ஒரு விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை எடுத்துள்ளது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தால், தொடரின் வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிப்பதாக இரண்டாவது போட்டி மாறியுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, லஹிரு திரிமன்னே இணை தொடக்கம் கொடுத்தது. இந்த இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆரம்பத்தில் மிக நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கருணாரத்ன 7 பௌண்ட்ரிகளுடன் 111 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அவரைத் தொடர்ந்து லஹிரு திரிமன்னே 6 பௌண்ட்ரிகளுடன் 102 பந்துகளில் 50 அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் சற்று வேகமாக ஆடிய கருணாரத்ன 13 பௌண்ட்ரிகளுடன் 165 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் 12ஆவது டெஸ்ட் சதமாகும்.

கருணாரத்னவை தொடர்ந்து, 212 பந்துகளை சந்தித்த லஹிரு திரிமன்னே 11 பௌண்ட்ரிகளுடன் தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

190 பந்துகளை எதிர் கொண்ட நிலையில், கருணாரத்ன 118 ஓட்டங்களுடன் சொரிபுல் இஸ்லாமின் பந்தில் விக்கெட் காப்பாளர் லிதொன்டாஸிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து ஒஸத பெர்னாண்டோ களம் புகுந்தார். இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

நேற்றைய தினம் ஆட்டம் முடிவின்போது 90 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 291 ஓட்டங்களை இலங்கை அணி எடுத்தது.

லஹிரு திரிமன்னே 131 ஓட்டங்களுடனும், ஒஸத பெர்னாண்டோ 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# மீண்டு வந்தார் கொக் மும்பை இலகு வெற்றி

டில்லி, ஏப். 30

குயின்ரன் டி கொக்கின் அதிரடி ஆட்டத்தால் ராஜஸ்தான் அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐ.பி.எல். தொடரில் நேற்று பகல் நடந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

டில்லியில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு ஜோஸ் பட்லர், ஜெய்ஸ்வால் தொடக்கம் கொடுத்தனர். 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 32 ஓட்டங்களை எடுத்து ஜெய்ஸ்வால் ஆட்டமிழந்தார். 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 41 ஓட்டங்களுடன் ஜோஸ் பட்லர் வெளியேறினார்.

அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 5 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களையும், சிவம் துபே 35 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்களை எடுத்தது ராஜஸ்தான்.

மும்பையின் பந்துவீச்சில் ராகுல் சாகர் 2 விக்கெட்களையும், போலட், பும்ரா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

172 என்ற இலக்கை விரட்ட ஆரம்பித்தது மும்பை இந்தியன்ஸ். ரோஹித் - கொக் இணை தொடக்கம் கொடுத்தது. ரோஹித் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்தார் சூரியகுமார் யாதவ் 10 பந்துகளை சந்தித்த அவர் 3 பந்துகளை பௌண்ட்ரிக்கு விரட்டி 16 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த குர்னல் பாண்ட்யா 2 பந்துகளை பௌண்ட்ரிக்கு விரட்டியும், 2 பந்துகளை சிக்ஸருக்கு பறக்கிவிட்டும் 39 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

18.3 ஓவர்களில் வெற்றி இலக்கான 172 ஓட்டங்களை 3 விக்கெட்களை மட்டும் இழந்து பெற்றது மும்பை இந்தியன்ஸ் அணி.



குயின்ரன் டி கொக் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 70 ஓட்டங்களை குவித்தும், கிரன் பொலார்ட் 16 ஓட்டங்களை எடுத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ராஜஸ்தானின் பந்துவீச்சில் மொறிஸ் 2 விக்கெட்களையும், ரஹ்மான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனா குயின்ரன் டி கொக் தெரிவானார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. கு.ஓ. அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
12.30மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக் காலம் இந்தக் காலம்



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகமூர்த்தி ஆலயம்
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
9.00 மணி : யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகமூர்த்தி ஆலயம்

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித வேளாங்கன்னி மாதா மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org